# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 10
செய்தி 7
பிப்ரவரி 2022
விலை ரூ 10/-


## புதுச்சேரி மின்துறையை தனியார் மயமாக்குவதை கண்டித்து தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுவரும் புதுவை மின்ஊழியர், பொறியாளர்களுக்கு ஆதரவும், வாழ்த்துக்களும் தெரிவித்து தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு குழு சார்பில் 1.02.2022 அன்று புதுவையில் ஆர்ப்பாட்டம்









கேங்மேன் பணியாளர்களின் சிறப்பு பேரவை நீலகிரி





விடுபட்ட கேங்மேன் பயிற்சியாளர்களை பணிக்கு எடுக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்
பெரம்பலூர்

# மின்கதிர்
## செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**
**பிப்ரவரி 2022**


**உள்ளே....**


- ★ ஏமாறுபவர்கள் இருக்கின்ற வரையில் ஏமாற்றங்கள் தொடரும்
- ★ வரலாறு தெரியாத மோடி அரசாங்கத்தின் வல்லுநர்கள்
- ★ காலிப்பணியிடங்களை நிரப்பாமல் காலம் தாழ்த்தும் வாரியம்
- ★ யூனியன் பிரதேச மின்வாரியங்களை தனியார்மயமாக்கும் மோடி அரசின் நடவடிக்கையும் பாண்டி ஊழியர்களின் வேலை நிறுத்தமும்
- ★ புதுவை மின் ஊழியர்களின் எழுச்சிமிக்க போராட்டம் வெற்றி
- ★ தேசம் தழுவிய வேலை நிறுத்தம்
- ★ மின்வாரிய ஊழியர்களின் சம்பள உயர்வு மத்திய அமைப்பின் கோரிக்கைகள்
- ★ உழைக்கும் மக்களுக்கான பட்ஜெட் அல்ல



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**

**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி



முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


# ஏமாறுபவர்கள் இருக்கின்ற வரையில் ஏமாற்றங்கள் தொடரும்!

வரலாறு தெரியாத மோடி அரசாங்கத்தின் வல்லுர்கள், சுதந்திர போராட்ட வீரர்களான, பாரதியையும், வ.உ.சியையும், வேலுநாச்சியாரையும் தெரியாது. ஆகவே அலங்கார ஊர்த்திகளை ஜனவரி 26 குடியரசு தின அணிவகுப்பில் அனுமதிக்க முடியாது என தெரிவித்ததும்,போரில் உயிர் இழந்த இராணுவ வீரர்களின் நினைவிடமான(ஜெய் ஜவான்) அமர்ஜோதியை அனைத்து வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்ததும். தேசத்திற்கு மோடி அரசின் அவமானகரமான செயல். எங்கும் மோடி எதிலும் மோடி என்ற பேராசையோடு செயல்பட்டு வருகிறார்.

பொதுவாக பட்ஜெட் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு அல்வா கிண்டுவார்களாம்! ஆனால் அல்வாயையே கொடுத்து சாதனை படைத்த ஒன்றிய அரசு! பிப்ரவரி 1 அன்று நாடாளுமன்றத்தில் பட்ஜெட்டை சமர்ப்பித்துள்ளது. மக்கள் நலன் மீது கவலைப்படாத, விவசாயிகள் போராட்டத்திற்கு பழிவாங்கும் பட்ஜெட்டாகவும், கார்ப்பரேட்டுகளுக்கு ஏராளமான சலுகைகள் வழங்கிய பட்ஜெட்டாகவும், உணவு மானியத்தை வெட்டி, வேலைவாய்ப்பை சுருக்கி இதர பொதுத்துறைகளையும் நாசகர கொள்கையின் அடிப்படையில் தனியார் மயமாக்க உறுதி பூண்டுள்ள பட்ஜெட்.

அநேகமாக தனக்குத்தானே மோடி அரசு பாராட்டு தெரிவித்த பட்ஜெட். வேலை வாய்ப்புகளை பற்றியோ, வறுமையையும், பசி பட்டினி கொடுமைகளை அதிகப்படுத்தும் என தெரிந்திருந்தும் கார்ப்பரேட்களுக்கு வெஞ்சாமரம் வீசும் பட்ஜெட்டை சமர்ப்பித்துள்ளது மோடி அரசு.

இந்த பட்ஜெட்டின் பாதிப்புகள் உழைக்கும் வர்க்கத்தை மேலும் ஏழ்மைநிலைக்கு அடையச் செய்வதோடு, பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக மாற்றும். கடந்த இரண்டு ஆண்டுகளாக வணிகர் சிறுகுறு தொழில்கள், வியாபாரிகள், முறைசாரா தொழிலாளர்கள் என அனைவரும் தொழில் முடங்கி பாதிப்பு ஏற்பட்டு இருந்ததை அறிந்தும் நிவாரணத்தை தர எதிர்பார்ப்புகள் இருந்தும் எதிர்பார்ப்பை நிறைவேற்றாத பட்ஜெட்.

இதே கால கட்டத்தில் மின்துறையை தனியார் மயப்படுத்த ஒன்றிய அரசு முடிவு செய்து பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களில் அமல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக புதுவை, சண்டிகர் ஆகிய பிரதேசங்களிலுள்ள மின்துறையை தனியார் மயப்படுத்த நடவடிக்கை எடுத்து வந்தது. சண்டிகரில் பிப்ரவரி 1-ந்தேதி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தமும், புதுவை பிரதேசத்தில் காலவரையற்ற வேலை நிறுத்தமும் துவங்கியது. புதுவையில் இரண்டு நாள் போராட்டத்திற்கு பின்பு புதுவை முதல்வருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நடைபெற்ற உறுதிமொழியை ஏற்று போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. புதுவையில் மின் ஊழியர்கள்,பொறியாளர்களின் எழுச்சியான போராட்டம் மின்துறையை பொதுத்துறையாகவே பாதுகாத்துள்ளது.

தமிழக மின்வாரியத்தில் தமிழக அரசின் அறிவிப்பின்படி ஒரு லட்சம் மின் விவாசய மின் இணைப்புகளை வழங்க அறிவிப்பு செய்துள்ளது வரவேற்க வேண்டிய விஷயம். ஆனால் தளவாட பொருட்கள் இல்லாமலேயே மின் இணைப்பு எவ்வாறு வழங்க முடியும் என்பதை யோசிக்காமல் மேல்மட்டத்திலிருந்து அழுத்தம் கொடுத்தது எந்த விதத்திலும் நியாயமல்ல விவசாய மின் இணைப்புகளுக்கு நடைமுறையில் உள்ள சிக்கல்களை வாரியம் உணராமல் இல்லை.ஆனாலும் நிர்பந்தம் அளிப்பது நியாயம் தானா?

மின்வாரியத்தில் அவுட்சோர்சிங் முறையை அமல்படுத்த மாட்டோம் என்று நாம் போராடிய பொழுது சொன்ன வாரிய நிர்வாகம் தற்போது அவுட்சோர்சிங் முறையை புகுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. துணை மின் நிலையங்கள் மற்றும் இதர பகுதிகளில் அவுட் சோர்சிங் முறையை புகுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. வடசென்னை அனல் மின் நிலையத்தின் கரிகையாளும் பகுதியில் பராமரிப்பும்,மின்சார பொருட்கள் பராமரிப்பு பணி, இயந்திரவியல் பணிகளை தனியாரிடம் விட டெண்டர்கள் கோரப்படுகிறது இதை எதிர்த்து கடுமையாகப் போராட வேண்டியுள்ளது.

கரூர், திருவண்ணாமலை,தஞ்சாவூர், ஆகிய இடங்களில் மண்டல தலைமை பொறியாளர் அலுவலகங்கள் உருவாகியுள்ளது. இந்த அலுவலகத்திற்கு மண்டல தலைமை பொறியாளர் பதவியும், ஊழியர்கள் பதவியும் அனுமதிக்கப்படாமல் REDIPLOYMENT முறையை பயன்படுத்த திட்டமிட்டுள்ளனர். இது சரியானதல்ல. இதனால் கூடுதல் பணிச்சுமையோடு ஊழியர்கள் பணியாற்ற தள்ளப்படுகிறோம். வாரியம் உணர மறுப்பது ஏன்?

மின்வாரிய பணியாளர்களுக்கு 01.12.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வை உடனடியாக வழங்க வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். மத்திய அமைப்பின் கோரிக்கை பட்டியலையும் 08.02.2022 அன்று வெளியிட உள்ளோம். பேச்சுவார்த்தையை துவங்க வாரியத்திடம் வற்புறுத்துவோம்.

மின்வாரியத்திலுள்ள காலிப்பணி இடங்களை நிரப்பிட உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். பல ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த ஊழியரைக் கொண்டும், படித்த இளைஞர்களை கொண்டும் நிரப்பிடவேண்டும். அப்ரண்டிஸ் பயிற்சி முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. இந்த எதிர்பார்ப்புகளை விடியல் அரசு நிறைவேற்றுமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**எதிர்பார்ப்புகள் நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு**

**காத்திருக்கும் மின் ஊழியர்கள் - பொறியாளர்கள்**

# வரலாறு தெரியாத







# மோடி அரசாங்கத்தின் வல்லுநர்கள்

**- எஸ்.இராஜேந்திரன்**

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26-ல் குடியரசு தின அணிவகுப்பில், தங்களது மாநிலத்தில் அதாவது மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்படுவதற்கு முன்பே அந்தந்த பகுதியில் ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்தின் நடவடிக்கையை எதிர்த்து வீரஞ்செறிந்த போராட்டங்களை எழுத்தாலும் எண்ணத்தாலும்,போரிலும் தங்களது தியாகத்தை செய்தவர்களை தலைவர்களாக நினைவு கூர்ந்து வாகன அணிவகுப்பில் இடம்பெற செய்து இந்த தேசம் கொண்டாடி வருகிறது இந்த தலைவர்களால் தான் சுதந்திரத்தின் தாகத்தை தீர்க்க முடிந்தது என்று உறுதியாக நம்பியது.

ஆனால் இந்துத்துவாவை அமல்படுத்து கின்ற மதவெறி பிடித்த பி.ஜே.பி. அரசு சுதந்திரப் போராட்டத்தில், அந்தமான் சிறையில் மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்த சாவர்க்கரை சுதந்திர போராட்ட தியாகியாக சித்தரிக்கிறது.

தமிழகம், கேரளா, மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் அலங்கார ஊர்திகள் குடியரசுதின அணி வகுப்பில் நிராகரிக்கப் பட்டிருப்பது கூட்டாட்சி தத்துவத்திற்கும், விடுதலை போராட்டத்தின் சமூக, கலாச்சார பாரம்பரியங்களுக்கும் இழைக்கப்பட்ட அவமதிப்பு.

தமிழ்நாடு அரசு தமிழகத்தின் முக்கிய விடுதலைப் போராட்ட வீரர்களான வீரமங்கை வேலுநாச்சியார், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், விடுதலைப் போராட்டத்தின் தேசிய மகாகவி பாரதியார் உள்ளிட்டோரை அலங்கார ஊர்தியில் சித்தரித்திருந்தது. ஒன்றிய அரசினுடைய வல்லுநர்குழுவிற்கு இவர்களைப் பற்றி தெரியாது என தெரிவித்ததோடு, வ.உ.சி.யை வணிக வியாபாரி என்று கூறிவிட்டது. ஆகவே குடியரசு தின அணிவகுப்பில் சேர்க்க மறுத்து விட்டனர்.

**யார் இந்த வேலுநாச்சியார்?**

இந்திய சுதந்திரத்திற்காக வெள்ளைய கம்பெனி அரசை எதிர்த்து போரிட்ட முதல் பெண்மணி என ஜான்சிராணியையே சொல்லி இன்று வரை கூறி வருகிறார்கள். ஏனென்றால் இந்திய சுதந்திர வரலாறுகளை பெரும்பாலும் வடநாட்டுகாரர்களே எழுதி வந்த காரணத்தினால் அவர்களுக்கு ஜான்சி ராணியைப் பற்றியே தெரிந்திருந்தது.

ஜான்சி ராணி பிறந்தது 1830-ல் ஆனால் இவருக்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே 1730-ல் பிறந்தவர் நமது வேலு நாச்சியார்.

மதுரை நாயக்கர்கள் தங்களின் நிலப்பரப்பை ஆள முடியாததால் பல பாளையங்களை உருவாக்கினார்கள். அந்த பாளையங்களை ஆள்பவர்களை பாளையக்காரர்கள் என அழைக்கப்பட்டனர். பாஞ்சாலங்குறிச்சியை

வீரபாண்டிய கட்டபொம்மன் ஆண்டதைப்போல சிவகங்கை சீமையை கச்சவான பெரிய உடையார் தேவர் ஆண்டார். இதன் தொடர்ச்சியாக இராமநாதபுரம் சேதுபகுதியாக இருந்த செல்ல முத்து தேவருக்கும் அவரது மனைவி முத்தம்மாள் நாச்சியாருக்கும் 1730-ல் மகளாக பிறந்தார் வேலுநாச்சியார். தனக்கு ஆண் வாரிசு இல்லை என்று கவலை கொள்ளாமல் பெண் குழந்தையான வேலு நாச்சியாருக்கு குதிரை ஏற்றம், வால்வீச்சு, சிலம்பம் போன்ற போர்க்கள பயிற்சிகளை கற்றுக்கொடுத்தார். மகளுக்கு தாய் மொழி மட்டுமல்லாமல் கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது, சமஸ்கிருதம், ஆங்கிலம் என ஆறு மொழிகளையும் கற்றுக் கொடுத்து பன்மொழி புலவராக மாற்றினார் வேலுநாச்சியாரின் தந்தை.

அப்போதெல்லாம் 12,13 வயதில் திருமணம் செய்து விடுவது வழக்கம் சிவகங்கை சீமையை ஆண்ட முத்து வடுகநாதர் அவர்களுக்கு 1746-ல் திருமணம் முடித்து வைத்தார். முத்து வடுகநாதர் சிவகங்கை சீமையை நல்லமுறையில் ஆட்சி செய்து கெதாண்டிருந்தார். சிவகங்கை சீமை செழிப்புடன் இருந்தது. 1772-ல் ஆங்கிலேயே தளபதியாக இருந்த பான்சோ என்பவன் பீரங்கி படையோடு வந்து முத்துவடுகநாதர் படையோடு மோதினான். இப்போரில் முத்து வடுகநாதர் வீரமரணம் அடைந்தார்.

பகலில் போர் நடத்தாமல் இரவில் ஆந்தைகள் போல் வந்து போர் நடத்தி தன் வீர கணவரின் உயிரை பறித்து விட்டார்களே என்று பொங்கி எழுந்த வேலுநாச்சியார் மருது சகோதரர்ளுடன் திண்டுக்கல் அருகே உள்ள விருப்பாட்சி என்ற பாளையத்திற்கு சென்றார். வேலுநாச்சியாரை பாதுகாப்பானஇடத்தில் தங்க வைத்து மருது சகோதரர்கள் சிவகங்கை சென்று மக்களை போராட்டத்திற்கு தயார் செய்தார்கள்.

எட்டு ஆண்டுகள் கழித்து மைசூர் மன்னர் ஹைதர்அலி உதவியோடு படைவீர்களை திரட்டி மருது சகோதரர்களோடு சிவகங்கையை மீட்க வேலுநாச்சியார் புறப்பட்டார். ஆங்கிலேயே கர்ணல் மார்டிசின் படையோடு யுத்தம் செய்து மதுரையை விட்டே ஓடச்செய்தார் வேலு நாச்சியார். கும்பினி படைகளுக்கு எதிராக மும்முனை தாக்குதலை நடத்தினார்.

கணவனை கொன்ற பான்சோரை போரில் தோல்வியுற்று அடிபணிந்த பொழுது அவனைக் கொல்ல வாளை உயர்த்திய வேலு நாச்சியார் **“பகைவனுக்கும் அருள்வாய் நன் நெஞ்சே”** என்ற தாயுமான அடிகளின் நல்வாக்குப்படி உயிர் பிச்சை அளித்தார். 1780-ம் ஆண்டு சிவகங்கைச் சீமையை மீட்டெடுத்தார் வேலு நாச்சியார். வேலுநாச்சியாரும், மருது சகோதரர்களும் சிவகங்கை சீமையின் அடையாளங்கள்

**வ.உ.சி. யார்?**

1872-ல் செப்டம்பர் 5-ந்தேதி ஒட்டப்பிடாரத்தில் பிறந்தார். அவரது தந்தை உலகநாத பிள்ளை, நாட்டின் மிக முக்கியமான வழக்கறிஞர்களில் ஒருவர். வ.உ.சி. அவர்களும் தந்தையை போலவே படித்து வழக்கறிஞர் ஆனார். தந்தைக்கும் மகனுக்கும் அடிப்படையில் வேறுபாடு இருந்தது. உலகநாதன் பிள்ளை பணக்காரர்களின் பிரச்சனைகளில் மட்டுமே வாதாடுபவர். ஆனால் வ.உ.சி. ஏழை மக்களின் மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாக வாதாடி இருக்கிறார்.

1905-ல் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் உறுப்பினரானர். இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக முழுமனதுடன் சுதேசி பணியில் ஈடுபட்டார். சுதேசி வேலையின் ஒரு பகுதியாக இலங்கை கடலோரங்களிலுள்ள ஆங்கிலேய கப்பல் போக்குவரத்தின் ஏகபோகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணினார். 1906 நவம்பர் 12-ல் சுதேசி ஸ்டீம் நேவிகேசன் நிறுவனத்தை நிறுவினார். இரண்டு நீராவி கப்பல்களை அரபிந்தோ கோஷ் மற்றும் பாலகங்காதர திலகர் உதவியுடன் வாங்கினார். வ.உ.சியின் கப்பல்கள் தூத்துக்குடி - கொழும்பு இடையே வழக்கமான சேவைகளை துவங்கியது. இந்த கம்பெனி பிரிட்டிஷ் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனிக்கு கடும் போட்டியாக இருந்தது. போட்டியை சமாளிக்க முடியாத ஆங்கிலேய கம்பெனி இலவசமாக பயணிகளை அழைத்துச் செல்வதும், குடைகள் வழங்கும் யுக்திகளை கையாண்டு நெருக்கடிகளை கொடுத்தனர். வ.உ.சியின் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் திவாலாகும் விளிம்பிற்கு சென்றது.

சுதேசி இயக்கத்தை விரிவாக்கம் செய்தற்காகவும். ஆங்கிலேய அரசாங்கத்தைப்பற்றி இந்திய மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நோக்கத்தோடு செயல்பட்டார் என்றும், அரசாங்கத்திற்கு எதிரான துரோகம் என குற்றம் சாட்டி மார்ச் 12,1908 -ல் கைது செய்தனர். பின்னர் கோவை மத்திய சிறையில் 1908 ஜுலை 9 முதல் 1910 டிசம்பர் 1 வரை சிறையில் அடைக்கப் பட்டார்.

வ.உ.சியின் உடல்நிலை பாதித்த காரணத்தால் ஆங்கிலேய அரசு அவரை விடுதலை செய்தது பாரிஸ்டர் பட்டம் பறிக்கப்பட்ட காரணத்தினால் சட்ட பயிற்சியும், மேற்கொள்ள முடியவில்லை. 1911-ல் சுதேசி நிறுவனம் ஒழிக்கப்பட்டதால் ஏழ்மை நிலைக்கு தள்ளப் பட்டார். வ.உ.சி. 1936 நவம்பர் 18-ல் இயற்கை எய்தினார்.

கோவை சிறையில் வ.உ.சி இழுத்த செக்கு இன்றும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கோவையில் வ.உ.சி. பூங்காவும்,வ.உ.சி. மைதானமும் உள்ளது. அவரது நினைவு கூறும் வகையில் அவரது பெயரில் தூத்துக்குடியில் ஒரு கல்லூரியும், தூத்துக்குடி துறைமுகம் வ.உ.சி. போர்ட் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 1972 செப்டம்பர் 5-ல் அவரது நூற்றாண்டு விழாவை நினைவு கூறும் விதத்தில் இந்திய தபால் துறை ஒரு சிறப்பு தபால் தலையை அவரின் பெயரில் வெளியிட்டது.

**பாரதி யார்?**

1882 டிசம்பர் மாதம் 11-ம் தேதி எட்டயபுரத்தில் சின்னசாமி அய்யர், லட்சமி அம்மாள் தம்பதியருக்கு மகனாக பிறந்தார். அவரது இயற்பெயர் சுப்பையா 11 வது வயதிலேயே எட்டயபுர சமஸ்தான புலவர்கள் பெரும் சபையில் சோதித்து வியந்து பாரதி என்ற பட்டத்தை அளித்தனர்.மதுரை சேதுபதி பள்ளியில் தற்காலிக தமிழ் பண்டிதராக பணியாற்றிவர் தாய் மொழியின் மீது பற்று கொண்டவர் பாரதி.

இளம் வயதியிலேயே 34 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தவர் பாரதி. 1905 -ல் வங்க பிரிவினை வந்தபொழுது சமூக சீர்த்திருத்த வாதியான பாரதி அரசியல் தீவிரவாதியானார். விடுதலை போராட்ட காலத்தில் தேசிய உணர்வு களை கவிதைகளாக படைத்து மக்களை ஒருங்கிணைத்தவர் பாரதி. பாரதியின் எழுத்துக்களை கண்டு ஆங்கிலேயே அரசு,அவரின் எழுத்துக்களையும், புத்தகங்களையும் தடை செய்தது வரலாறு பாரதி ரஷ்யப்புரட்சியை எதிர்பார்த்து படைத்த கவிதைகளும் கட்டுரைகளும் இன்றும் உற்சாகத்தை அளிக்கும். பெண்ணுரிமை போராளியாக இருந்தவர். பாரதி பெண்களின் கல்வியறிவதற்காக சட்டங்களை இயற்றிடவும் கனவு கண்டவர் பாரதி.

தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்கு முன்பே

**“ செந்தமிழ் நாடென்றும் போதினேலே -**
**இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே -**
**எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே**
**ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே ”**

என்று பாடிய எங்கள் பாரதியை மோடி வகையறாக்களுக்கும் அவரால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழுவிற்கும் தெரியாது. பாண்டித்துரை தேவர் தலைமையில் 40,000 பங்குகளை தலா ரூ.25-க்கும் விற்பனை செய்து ரூ. 10 லட்சம் முதலீடு திரட்டியும். மனைவி நகைகளை விற்றும் சதேசி கப்பல் நிறுவனத்தை துவக்கிய வ.உ.சி. முயற்சிக்கு பெயரே தற்சார்பு பொருளாதாரம் அதிகாரத்தில் நாட்டின் வளங்களை கார்ப்பரேட்டுகளுக்கு விற்பதற்கு பெயர் ஊதாரித்தனம்.

சுதந்திர போராட்டம் என்பது வடக்கிலிருந்து தொடங்கியதை போன்ற தோற்றத்தை உருவாக்கியதால் தென்னாட்டவர் களின் போராட்டங்கள் தெரியாமல் போய் விட்டது.

ஆகவே இந்த ஆண்டு ஜனவரி 26 ஒன்றிய பிஜேபி அரசால் நிராகரிப்பட்ட இந்த அலங்கார ஊர்திகள் தமிழகம் முழுவதும் பவனி வரும் என தமிழக அரசு அறிவித்துள்ளதை வரவேற்போம்.

இதை மனதில் கொண்டு நமது எதிர்கால சந்ததிகளுக்கு சுதந்திர போராட்ட தலைவர்களின் தியாகங்களை கொண்டு செல்வோம் **“ தேச பக்தியை ஊட்டுவோம்”** இது நமது தலையாய கடமை. ஏனெனில் வரலாற்றை திருத்த முயற்சிக் கும் சாவர்க்கரின் வாரிசுகளான இந்த ஆட்சியாளர் கள் எதையும் செய்ய நினைப் பவர்கள் அல்லவா?



# காலிப் பணியிடங்களை நிரப்பாமல் காலம் தாழ்த்தும் வாரியமும் அரசும்...!

- தி. ஜெயசங்கர்

மின்வாரியத்தில் காலிப்பணியிடங்கள் 51,000-க்கும் மேற்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக களப்பணியில் உள்ள களஉதவியாளர், கம்பியாளர், பணியிடங்கள் மட்டும் 23,000 காலியாக உள்ளது. மின் நுகர்வோருக்கு நேரடியாக தொடர்பு கொண்ட தடையில்லா மின்சாரத்தை வழங்குகின்ற பணியை களப்பணி ஊழியர்கள் செய்து வருகின்றனர். மூன்றாண்டுகளாக மின்வாரியம் அறிவித்த 2900 களஉதவியாளர் (ஐடிஐ) பணியிடங்களை நிரப்பாமலும், ஒப்பந்த ஊழியர்களை அடையாளங் காணாமல் காலம் தாழ்த்தி வருகிறது. தமிழக அரசும், மின்வாரியமும் இதனால் கூடுதல் வேலை பளுவை சுமந்து மன உளச்சலுக்கு ஆளாகி மின் விபத்து ஏற்பட்டு எண்ணற்ற களப்பணி ஊழியர்கள், ஒப்பந்த ஊழியர்கள் இறந்து போனார்கள். பலர் படுகாயம் அடைந்தார்கள் இதனை அவ்வப்போது நிர்வாகத்தின் கவனத்திற்கு அழுத்தமாக கொண்டு சென்றுள்ளோம்.

அதே போல கணக்கீட்டாளர் பணியிடங்கள் 4000-க்கும் மேற்பட்டுள்ள காலி பணி இடங்களாக உள்ளது. இளநிலை உதவியாளர் (கணக்கு) 1500 காலிப்பணியிடங்கள், அறிவித்ததோ 500. அதே போல உதவி பொறியாளர், தொழில் நுட்ப உதவியாளர் காலிப்பணியிடங்கள் ஆயிரத்திற்கும் மேல் காலிப்பணியிடங்களாக உள்ள நிலையில் அந்த பணி இடங்களை நிரப்புவதற்கு சென்ற ஆட்சியில் அறிவிக்கப்பட்ட குறைந்தப்பட்ச எண்ணிக்கை கூட இன்று வரை எடுபதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாமல் உள்ளது. இதற்கு மின்வாரியம் சொல்லும் காரணம் 2020, 2021-ல் ஏற்பட்ட கொரானா பெருந்தொற்று என்று சொன்னாலும், தமிழக அரசின் நிதிநிலை சரியில்லை என்ற காரணத்தினால் காலம் தாழ்த்தப்படுகிறது என்ற காரணங்கள் ஏற்புடையதாக இல்லை. மின்சார வாரியம் மின்நுகர்வோருக்கு தடையில்லாத மின்சாரத்தையும், தரமான மின்சாரத்தையும் அளிக்க வேண்டுமானால் போதிய அளவில் பணியாளர்களை அமர்த்திட வேண்டுமென்பது அரசும், வாரியமும், மற்றும் தொழிற்சங்கமும் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தை வாரியமும், அரசும் மீறுகின்றது என்பது நமது குற்றச்சாட்டாகும்.

காலிப்பணி இடங்களை நிரப்பாமல் கூடுதல் வேலை பளுவை சுமந்து மனஉளச்சலுக்கு உள்ளாகி இறந்து போன மின் ஊழியர்களின் குடும்பங்களுக்கு, ஒப்பந்த ஊழியர்களின் குடும்பங்களுக்கு வாரியமும் அரசும் என்ன பதில் சொல்லப்போகிறது. வாக்களித்த மக்களுக்கு வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டியதுஅரசின் கடமையல்லவா? அந்த கடமையை நிறை வேற்றுவதற்கு பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்ற நியதி, இயற்கை நியதிக்கு எதிரானது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தமிழகத்தில் பல லட்சங்கள் உள்ளன. ஆட்சியாளர்கள் ஒவ்வொரு முறையும் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக எண்ணற்ற வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். அப்படிப்பட்ட வாக்குறுதிகளை ஆட்சிக் கட்டிலில் ஏறிய பிறகு செய்ய வேண்டும் என்ற கடமை அவர்களுக்கு இருப்பதை போல ஆட்சியாளர்கள் உணர்ந்ததாக தெரிய வில்லை. அதிமுகவின் கடந்த 10 ஆண்டு ஆட்சிகாலத்தில் இது தான் நடந்தது. 10,000 கேங்மேன் பணி நியமனம் செய்ததைத்தவிர மின்வாரியத்தின் வளர்ச்சியில் அவர்களின் பங்கு குறைவு.

மின்வாரியம் என்ற பொதுத்துறை நிறுவனத்தில் பல ஆயிரம் காலிப்பணி இடங்கள் ஆண்டு தோறும் ஏற்படுகிறது. காலிப்பணி இடங்களை அவ்வப்போது நிரப்பி மின்வாரியத்தை சிறப்பாக செயல்படுத்துவது மட்டுமல்ல, இளைஞர்களுக்கு வேலையளித்து அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க முடியும். அதை செய்யாமல் இலவு காத்த கிளியாக காத்திருக்கச் செய்து தமிழக இளைஞர்களை, வாக்களித்த இளைஞர்களுக்கு வஞ்சிக்கும் செயலென்றே கருதுகிறோம்.

இந்த நிலையில் மின் ஊழியர் மத்திய அமைப்பு மின்வாரியத்தில் காலிப்பணி இடங்களை நிரப்பிடக்கோரி தனியாகவும், தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைகுழு, சார்பாகவும் இயக்கங்களை, போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். இனி மேலும் கொரானா தொற்று என்று சொல்லி, தமிழக நிதி நிலை சரியில்லை என்று கூறியும். மின்வாரிய ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களை ஏமாற்ற இயலாது. ஏற்கனவே மின் ஊழியர்கள் 18 மாதகாலம் பஞ்சப்படியை, இரண்டு ஆண்டுகள் சரண்டர் விடுப்பை, கொரானா பெருந்தொற்று என்று சொல்லி தமிழக அரசு அளிக்காமல் பலஆயிரம் கோடிகள் கொரானா பெருந்தொற்று நடவடிக்கைகளுக்கு மடைமாற்றம் செய்யப் பட்டுள்ளது. அவசர காலங்களில் பெருந்தொற்று காலங்களில் அரசின் நடவடிக்கைகளுக்கு அவ்வப்போது நாம் ஆதரவை அளித்து வந்தோம்.

இந்த நிலையில் 2022 புத்தாண்டு துவங்கியுள்ளது. 17 சதவீத பஞ்சப்படியை தமிழக அரசு அளித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. அதே நேரம் ஆட்சி மாற்றத்திற்கு பின் வந்த புதிய ஆட்சி தனது தேர்தல் அறிக்கையில் சொல்லியவாறு மின்வாரியம் உள்ளிட்ட அரசு துறைகளில் உள்ள காலிப்பணி இடங்களை நிரப்புவோம். பழைய பென்சன் திட்டத்தை கொண்டு வருவோம். ஒப்பந்த பணியாளர்களை பணி நிரந்தரம் செய்வோம். என்று சொன்ன வாக்குறுதிகளை தமிழக அரசு நிறைவேற்றும் என்று நம்புகிறோம்.

எனவே மின்சார வாரியத்தில் உள்ள காலிப்பணி இடங்களை நிரப்பிட வேண்டும். தடையில்லாத மின்சாரம் தர வேண்டுமானால் போதிய பணியாளர்களை அமர்த்துவதே இதற்கு சிறந்த தீர்வாக அமையும் என்பதை அரசும் வாரியமும் விரைந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

ஆட்கள் பற்றாக்குறையால் மனஉளச்ச லால் இனி மேல் ஒரு உயிரும் பலி ஆகாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மின்ாரியத்திற்கும், அரசுக்கும் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.




# யூனியன் பிரதேச மின்வாரியங்களை தனியார் மயமாக்கும் மோடி அரசின் நடவடிக்கையும் பாண்டிச்சேரி ஊழியர்களின் காலவரையற்ற போராட்டமும்!

ஒன்றிய நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கொரனாவால் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட பொருளாதார பாதிப்பை சரிசெய்ய, வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு ஊக்குவிப்பு திட்டத்தினை ரூ.20 லட்சம் கோடி மதிப்பீட்டில் அறிவித்தார். இந்த ஊக்குவிப்பு திட்டத்தில் (STIMULUS PACKAEGE) ஒன்றாக புதுச்சேரி யூனியன் பிரதேசம் உள்ளிட்ட 8யூனியன் பிரதேசங்களின் மின் விநியோகத்தையும், தனியாரிடம் ஒப்படைப்பது என அறிவித்தார். அறிவிப்பின் போதே மின்துறை நட்டத்தில் உள்ளது. மின்சாரத்தை வழங்கிய நிறுவனங்களுக்கு கடன்பாக்கிகளை மாநில அரசுகள் வைத்துள்ளது என்பன போன்ற விபரங்களை 15.05.2021 அன்று வெளியிட்டார்.

அதன் அடிப்படையில் மாநில மின்வாரியங்கள் மின் விநியோகம் செய்வதில் போட்டியாளர்களை அதாவது தனியார் மின் விநியோகம் செய்ய உள்ளவர்களை அனுமதிக்க வேண்டும் என்பதை மாநில அரசுகள் அமலாக்க வேண்டும் என நிர்பந்தித்தார்கள்.

மின் விநியோகிப்பாளர்களிடையில் போட்டியை உருவாக்கி அதன் மூலம் மின் கட்டணத்தை குறைக்க முடியும் என்றும், நுகர்வோரை தேர்வு செய்யும் உரிமையை இந்த தனியார் கம்பெனிகள் தேர்வு செய்து கொள்ளலாம். அதாவது மின் இணைப்பை தனியார் முதலாளிகள் வழங்கலாம் அல்லது மறுக்கலாம். தனியார் முதலாளிகள் தாங்கள் விரும்பும் மின்நுகர்வோரை தேர்வு செய்கின்ற பொழுது அவர்கள் அதிக பயன்பாடுகளை செய்பவர்களை மட்டுமே தேர்வு செய்வதோடு பெரும் வணிக நிறுவனங்களை தேர்வு செய்வார்கள், கிராமப்புறங்களை புறக்கணிப்பார்கள். மேலும் தனியார் மின் விநியோகிப்பாளர்கள் தங்கள் தேவைக்கேற்ப துணை மின் விநியோகிப்பாளர்களை ( FRANCHISE ) அனுமதிப்பதன் மூலம் ஊருக்கு ஒருவர், தெருவுக்கு ஒருவர் என்ற நிலை உருவாகும்.

மின் கட்டண நிர்ணயம் அரசின் கட்டுப்பாட்டிலிருந்து தனியார் கைகளுக்குச் செல்லும். தனியார் பெருமுதலாளிகள் தமது விருப்பம் போல மின் கட்டணத்தை உயர்த்திக் கொள்ளலாம்.

இந்த மோசடித்தனமான நடவடிக்கைகள் மாநில உரிமைகளை பறிக்கும் என்று தெரிந்தும் கூட பி.ஜே.பி. அல்லாத மாநில அரசுகள் கூட கவனம் அளிக்க மறுத்து வருவது கவலை அளிக்கிறது.கேரளம், தமிழகம், விதிவிலக்கு.

இந்த நடவடிக்கையை கண்டித்துத்தான் காஷ்மீரில் போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்றுள்ளார்கள். சண்டீகரிலும், புதுச்சேரியிலும் 2022 பிப்ரவரி ஒன்று முதல் காலவரையற்ற

வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளனர்.

**புதுச்சேரி வாரிய நிலை**

பிரெஞ்ச் இந்திய விடுதலைக்கு முன்பாக புதுச்சேரியின் 4 பிராந்தியங்களிலும் (புதுச்சேரி காரைக்கால், மாஹி, ஏனாம்) சிறு கம்பெனியாக இருந்தது. விடுதலைக்கு பின்பு புதுச்சேரியின் துறை கட்டமைக்கப்பட்டது. 3.5 லட்சம் வீடுகள், 56,000 வர்த்தக இணைப்புகள், 7000 விவசாய இணைப்புகள், 6000-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள், 500-க்கும் மேற்பட்ட பெரிய தொழிற்சாலைகள் என மின் இணைப்புக ளோடு புதுச்சேரி மின்துறை செயல்பட்டு வந்தது. இயற்கை எரிவாயூ மூலம் உற்பத்தியாகும் 32,5 மெகாவாட் உற்பத்தியைத்தவிர NTPC, NLC கூடங்குளம், கைகா, வல்லூர் உள்ளிட்ட மத்திய மின் தொகுப்பிலிருந்து புதுச்சேரிக்கான ஒதுக்கீடு என்ற முறையில் மின்சாரத்தை பெற்று மின் விநியோகம் செய்கின்றது.

புதுச்சேரி மின்துறைக்கான கடன் ரூ.872.54 கோடி இது தற்போது ரூ.1000/- கோடி அளவில் உயர்ந்திருக்கும்.தனியாரிடம் இருந்து ரூ. 181.9 கோடியும், அரசு அரசுசாரா நிறுவனங் களிடமிருந்து ரூ.460.34/- கோடியும் மின்துறைக்கு வரவேண்டியுள்ளது.மின் நிலையங்கள் மின் கம்பிகள், மின் மாற்றிகள், அலுவலகங்கள், நிலங்கள் போன்ற கட்டமைப்புகளில் சந்தை நிலவரப்படி மதிப்பு ரூ.25,000/- கோடி.

கார்ப்பரேட் ஆதரவு மோடி அரசு புதுச்சேரி மின்துறையை தனியார் மயமாக்க டிலாயிட் என்ற கம்பெனிக்கு தயாரிப்பு பணிகளை கொடுத்து டிரான்சிசன் ஆலோசகரை அனுப்பி உள்ளது. இந்த ஆலோசனை வழங்கும் டி லாயிட் என்ற கம்பெனி புதுச்சேரி மின் துறையின் சொத்து மதிப்பு ரூ.1500/ கோடி என கணக்கீடு செய்துள்ளது. ரூ. 25,000/- கோடி மதிப்புள்ள சொத்தை ரூ. 1500/- கோடிக்கு நிர்ணயிக்கும் மோடி அரசால் நியமிக்கப்பட்ட டிலாயிட் கம்பெனி கூறுகின்றது என்றால் இலாபம் யாருக்கு? சுமார் 2500 பணியாளர்கள் உள்ள புதுச்சேரி மின்துறையில் 1800 பணியாளர்களே பணி புரிந்து வருகின்றனர்.

தற்பொழுது புதுச்சேரி மின்துறையில் மின் விநியோகத்தை கைப்பற்ற தனியார் மயமாக்களின் டெண்டரில் இத்தாலி நாட்டிலிருந்து (ENEL) இனல் குரூப் அதானி, பவர் கார்ப்பரேசன், டோரன்ட்பவர், சிரிங்கோ, ரெனிவ் பவர் வென்சர், ஸ்டெர்லைட் பவர், NTPL, சஞ்சீவ் கோயங்கா, டாடா பவர் உள்ளிட்ட 9 கம்பெனிகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆக மொத்தத்தில் ரூ. 25000/- கோடி சொத்தை ரூ.1500/- கோடிக்கு கபளீகரம் செய்ய இந்த கம்பெனிகள் போட்டி போடுகின்றன.

ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து கண்டு கொள்ளாத புதுச்சேரி அரசையும் கண்டித்து 2022 பிப்ரவரி 1 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை புதுச்சேரியிலும் அதே போல சண்டிகரிலும், போராட்டத்தை துவங்க உள்ளனர்.

தமிழகத்தில் சண்டிகர், புதுச்சேரி மின் ஊழியர்களின் போராட்டம் வெற்றி பெற வாழ்த்தியும், அனைத்து மாவட்டங்களிலும் வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்த தமிழக மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு அறிவித்துள்ளது.

மின் துறையை நாசமாக்கும்
மோடி அரசின் கொள்கைக்கு
முடிவு கட்டுவோம்!

**பொதுத்துறையை பாதுகாக்க போராடுவோம்!!**

**சண்டிகர், புதுச்சேரி மின் ஊழியர்களின் போராட்டம் வெல்லட்டும்!!!**



**- எஸ்.இராஜேந்திரன்**



# புதுவை மின் ஊழியர்களின் எழுச்சிமிக்க போராட்டம் வெற்றி!

மின்துறையை தனியார் மயமாக்கும் ஒன்றிய பி.ஜே.பி அரசின் நடவடிக்கையை கண்டித்து புதுச்சேரியில் பிப்ரவரி 1 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தை புதுவை மாநில மின் ஊழியர்கள், பொறியாளர்கள் ஈடுபட்டு வந்தனர்.

முதல் நாள் நடைபெற்ற போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தமிழகத்திலிருந்து மத்திய அமைப்பின் தலைவர் தோழர்கள் தி.ஜெயசங்கர், பொதுச்செயலாளர் எஸ். இராஜேந்திரன், துணைப் பொதுச் செயலாளர்கள் கே.ரவிச்சந்திரன், டி.பழனிவேல், மாநில செயலாளர்கள் தோழர்கள் ஆர்.சிவராஜ், கே.காங்கேயன், மாநில துணைத்துலைவர் அம்பிகாபதி மற்றும் கிளை செயலாளர்கள் தோழர்கள் சேகர்-விழுப்புரம், தேசிங்கு - கடலூர், பாலாஜி - திருவண்ணாமலை உள்ளிட்டவர் களுடன் கிளை நிர்வாகிகளும் ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் மாநில தலைவரும் EEFI பொருளாளருமான தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன், ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் நிர்வாகிகள் தோழர்கள் புருசோத்தமன், தங்க அன்பழகன் மற்றும் ஓய்வு பெற்ற தோழர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கேரள மாநிலத்திலிருந்து தலைவர்கள் ஜெயபிரகாஷ் - KSEBWA மற்றும் தோழர் சுரேஷ்குமார் KSEBOA ஆகியோரும் கலந்து கொண்டனர். சகோதர சங்கங்களின் சார்பாக தலைவர்கள் தோழர் மூர்த்தி - சம்மேளனம், சேக்கிழார்- எம்பளாயீஸ் பெடரேசன், எம்.சுப்பிரமணியன் - ஐக்கிய சங்கம், பொறியாளர் சம்பத்குமார் - பொறியாளர் சங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி இரயில் நிலையம் முன்பிலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு ஒலி முழக்கத்தோடு போராட்டதிடலுக்கு சென்ற டைந்தோம். பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் தலைவர்கள் எழுச்சியுரை யாற்றினர்.

பிப்ரவரி -1 அன்று மாலை புதுவை மின்துறை அமைச்சர் மாண்புமிகு நமச்சிவாயம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. புதுவை தொழிற்சங்க தலைவர்களோடு,மத்திய அமைப்பின் தலைவர் தி.ஜெயசங்கர், பொதுச்செயலாளர் எஸ்.இராஜேந்திரன், துணை பொதுச்செயலாளர் கே.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காணாத நிலையில் பிப்ரவரி 2 மாலை புதுவை முதல்வரோடு பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப்பட்டு போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

இரண்டாம் நாள் நடைபெற்ற வேலை நிறுத்த திடலில் NCCOEEE-ன் கன்வீனரும்EEFI-யின் பொதுச்

செயலாளருமான தோழர் பிரசாந்தோ நந்தி சௌத்ரி, AIPEF-ன் தலைவரான திரு.சைலேந்திர துபே அவர்களும் தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி ஜெயந்தி அவர்களும், TNPEO பொதுச்செயலாளர் பொறிஞர் கே.அருள்செல்வன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

பிப்ரவரி - 2 மாலையில் புதுவை முதல்வர் மற்றும் மின்துறை அமைச்சரோடு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் புதுவை மின்சாரத்துறை தொழிற்சங்க தலைவர்களோடு மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் எஸ்.இராஜேந்திரன், துணைப்பொதுச்செயலாளர் கே.ரவிச்சந்திரன், AIPEF-ன் தலைவர் திரு.சைலேந்திர துபே மற்றும் தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி ஜெயந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதல்வரோடு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் புதுவை மக்களிடமும், மின் ஊழியர்களிடமும், எதிர்கட்சி தலைவர்களிடமும் தனியார் மயம் தொடர்பான சாதக,பாதக அம்சங்களை கேட்டறிந்து சட்டமன்றத்தில் விவாதித்து தீர்வு காணப்படும். அதுவரை தனியார்மய நடவடிக்கை கள் எதுவும் எடுக்கப்பட மாட்டாது என உறுதியளித்ததின் பேரில், இதையே பத்திரிக்கை யாளர் சந்திப்பில் மின்துறை அமைச்சர் தெரிவிக்க வேண்டுமென வலியுறுத்தியதன் அடிப்படையில் மின்துறை அமைச்சர் அவர்கள் அதையேற்று, பத்திரிக்கையாளர் சந்திப்பில் தெரிவித்ததன் அடிப்படையில் போராட்டக்குழு போராட்டத்தை விலக்கிக் கொண்டது.

**புதுவை மின்துறை ஊழியர்களின் ஒன்றுப்பட்ட போட்டத்திற்கு கிடைத்த வெற்றி!**



**புதுவை முதல்வருடன் மத்திய அமைப்பின் நிர்வாகிகள் பேச்சு வார்த்தை**



**புதுவை மின்துறை அமைச்சருடன் மத்திய அமைப்பின் நிர்வாகிகள் பேச்சு வார்த்தை**




# தேசம் தழுவிய வேலை நிறுத்தம்!

இந்திய தேசத்தின் இறையாண்மைக்கு எதிராக மதச்சார்ப்பின்மைக்கு எதிராக, ஜனநாயகத்திற்கு எதிராக செயல்பட்டு வரும் ஒன்றிய பி.ஜே.பி. அரசின் நடவடிக்கைகளை உழைப்பாளி மக்கள் வேடிக்கை பார்க்க மாட்டார்கள் என மோடி அரசாங்கத்திற்கு உணர்த்தும் நாள் மார்ச் 28-29

தேசத்தின் பொதுத்துறைகளை பாதுகாக்க வும், விவசாயம், கல்வி, மருத்துவம் போன்ற முக்கியமான துறைகளில் பொது முதலீட்டை அதிகப்படுத்தவும். தொழிலாளர் நலச்சட்டங்களை பாதுகாக்க களம் காணும் நாள் மார்ச் 28-29

தேசிய பணமாக்கல் திட்டத்தின் அடிப்படையில் பொதுத்துறைகளை விற்க/ குத்தகைக்கு விடுவதை கண்டித்தும், மின்சார சட்டத்திருத்த மசோதாவை கைவிட வேண்டும் என்று பறைசாற்றி வேலை நிறுத்தம் செய்யும் நாள் மார்ச் 28-29

இந்திய தேசத்தின் கோவில்கள் என்று வர்ணிக்கப்பட்ட பொதுத்துறைகளை அடிமாட்டு விலைக்கு விற்பதற்கு கார்ப்பரேட் நலனை கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகிறது மோடி அரசு.

ரூ.64,000/- கோடி கடனும்,ஆனால் அதற்கு மேல் சொத்து மதிப்பு இருந்த ஏர் இந்தியா நிறுவனத்தை வெறும் ரூ. 18000/- கோடிக்கு டாடா நிறுவனத்திற்கு விற்ற மோடி அரசு, சொந்த நாட்டிற்குள் செல்வதற்கு அரசு விமானம் இல்லாத நாடாக இந்தியாவை மாற்றியது தான் மோடி அரசின் ஆகப்பெரும் சாதனை.

எரிவாயு, நிலக்கரி,வங்கி, இன்சூரன்ஸ், இரயில்வே, பொதுப்போக்குவரத்து போன்ற வற்றை கார்ப்பரேட்டு வசம் ஒப்படைக்க துடிக்கும் மோடி அரசின் நடவடிக்கையை உழைப்பாளி மக்களிடம் கொண்டு சென்று வர்க்க உணர்வை ஊட்டிபொதுத்துறைகளை பாதுகாக்க மீண்டும் ஒரு சுதந்திர போராட்டத்திற்கு தயார் படுத்த வேண்டிய கடமை நம்முன் உள்ளது.

தொழிலாளர் நலச்சட்டங்களையும், தொழிற்தகராறு சட்டங்களையும், காலில் போட்டு கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்கு ஆதரவாக சட்டங்களை மாற்றத்துடிக்கும் இந்த ஆட்சி யாளர்களுக்கு பாடம் புகட்டும் நாளாக மார்ச் 28-29 அமைய வேண்டும். கடந்த எட்டு ஆண்டுகளில் எந்த ஒரு பொதுத்துறையைக்கூட உருவாக்க முடியாத கையாலாகாத அரசு இந்த அரசு.

கொரானா கொடிய நோய் தொற்று காலத்தில்கூட சாமான்ய மக்களின் நலனில் அக்கறை கொள்ளாமல் கார்ப்பரேட்டுகளின் விசுவாசிகளாகத்தான் இந்த அரசு செயல்பட்டது. கொரானா பெருந்தொற்றில் பணிபுரிந்த முன் களப்பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பும், காப்பீடு வசதியும் செய்து தர நிதி இல்லை என சொல்லும் திருவாளர் மோடி, ரூ.11 கோடி மதிப்புள்ள வெளிநாட்டு காரில் பல லட்சம் மதிப்புள்ள ஆடை அணிந்து ஏழைத்தாயின் மகனாக பவனி வருகிறார் வெட்கக்கேடு.

அரசின் கேந்திரமான துறைகளில்

காலிப்பணி இடங்களை நிரப்புவதற்கு பதிலாக அவுட்சோர்சிங், காசுவல், கான்ட்ராக்ட் முறையை புகுத்துகின்ற நடவடிக்கை,கார்ப்பரேட்டுகளுக்கு விசுவாசமான செயல்பாடல்லவா

புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை செயல்படுத்தி சமூக பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும். அரசின் திட்டங்களை கடைகோடி மக்களுக்கு கொண்டு செல்லும் அரசு ஊழியர்களின் பணி ஓய்வுக்கு பின் சமூக பாதுகாப்பை உறுதி செய்திடல் வேண்டும்.

5 ஆண்டுகள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு ஓய்வூதியத்தை வழங்கும் அரசுகள் பொதுத்துறையை பலப்படுத்திய அரசின் திட்டங்களை கடைகோடியில் சேர்த்த அரசு ஊழியர்கள், துறைரீதியான பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மறுப்பது நியாயம் தானா?

விவசாயிகள், ஓராண்டுக்கு மேல் போராடி 3 வேளாண் சட்டங்களை ரத்து செய்த அந்த வரலாற்று சிறப்புமிக்க போராட்டத்தை நெஞ்சில் நிறுத்தி நாம் நடத்துகின்ற இந்த வேலை நிறுத்தத்தை அந்த உணர்வோடு பங்கு பெற்று வெற்றி பெறச்செய்வோம்!

**- எஸ்.இராஜேந்திரன்**

# சி.இ.எல் நிறுவனத்தை ரூ.210/- கோடிக்கு விற்க ஒன்றிய அரசு முயற்சி!

பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கும் செயலில் ஒன்றிய மோடி அரசு ஈடுபட்டு வருகிறது. பாரத் பெட்ரோலியம். எல்.ஐ.சி என லாபத்தில் இயங்கும் நிறுவனங்களை விற்பனை செய்து வரும் மோடி அரசு சி.இ.எல். எனப்படும் மத்திய மின்னனு நிறுவனத்தை விற்க முடிவு செய்துள்ளது. நிதி ஆயோக் பரிந்துரையின் படி விற்க முடிவு எடுத்துள்ளதாம்.

சோலார் செல் உள்ளிட்டவைகளை தயாரிக்கும் இந்த நிறுவனம் பாதுகாப்புத் துறைக்காக ஏற்படுத்தப்பட்டது. பாதுகாப்பு துறையையே தனியார் மயமாக்க துடிக்கும் மோடி அரசுக்கு இத்துறையின் இணை துணை துறைகளை விட்டு வைப்பாரா?

உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ள இந்த நிறுவனத்தோடு 2 லட்சத்து 2 ஆயிரம் சதுர மீட்டர் நிலம் உள்ளது. உ.பி. அரசின் நில மதிப்பீடு அடிப்படையில் கணக்கிட்டாலே சுமார் ரூ. 440/- கோடி மதிப்புடையது. இவை தவிர கட்டிடம், வசதிகள் தொழிற்சாலை உபகரணங்கள் என கணக்கீட்டால் நிச்சயம் சுமார் 1000 கோடிக்கு மேல் மதிப்பு இருக்கும். ஏலம் எடுக்க நந்தல் பைனான்ஸ் அன்ட் லீசிஸ் பிரைவேட் கம்பெனிக்கு ரூ.194 கோடிக்கும் ஜெ.பி. எம். இன்டஸ்ட்ரிஸ் லிட் என்ற கம்பெனி ரூ.190 கோடிக்கும் ஏலம் கேட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. ஆனால் இதை வெறும் 194 கோடிக்கு நந்தல் லீசிஸ் மற்றும் பைனான்ஸ் நிறுவனத்துக்கு விற்க முயற்சி நடந்துள்ளது.இது ஏற்கனவே திவாலான நிறுவனம்.

தற்போது தொழிற்சங்கங்களின் போராட்டங்களாலும் சட்டமன்ற தேர்தல் காரணமாகவும், ஒன்றிய அரசு பின் வாங்கியுள்ளது. பாடம் புகட்டுவார்களா உ.பி.மக்கள்!

**- எஸ்.இராஜேந்திரன்**




# மின்வாரிய பணியாளர்களின் சம்பள உயர்வும் -மத்திய அமைப்பின் கோரிக்கையும்!

தமிழ்நாடு மின்வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 01.12.2019 முதல் ஊதிய உயர்வு - நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் கடந்த 01.12.2019 முதல் புதிய ஊதிய உயர்வு வழங்கப்பட ஒப்பந்தம் காணப்பட்டிருக்க வேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரானா நோய்தொற்று காரணமாக நிதி நிலையை காரணம் காட்டி எந்தவித நடவடிக்கையும் வாரிய நிர்வாகத்தால் எடுக்கப்படவில்லை. மின்வாரியத்தால் கடந்த 07.12.2019 நாளிட்ட வாரிய உத்தரவின்படி பேச்சுவார்த்தைக்குழு அமைக்கப் பட்டும் இது வரை இரண்டுஆண்டுகள் கடந்தும் மின்வாரிய பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க பேச்சுவார்த்தை துவக்கப்படவில்லை. இதற்கிடையில் கொரானா நோய் தொற்று காரணமாக தேசம் ஒரு அசாதாரண சூழ்நிலையில் இருந்த காரணத்தால் மின்வாரிய பணியாளர்கள் அரசோடு இணைந்து நின்று மக்கள் சேவையை அளித்து வந்தனர்.

ஏற்கனவே கடந்த 01.12.2015 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வை 01.10.2017 முதல் தான் வழங்கினார்கள். ஏறத்தாழ 18 மாதத்தின் நிலுவைத் தொகை பறிக்கப்பட்டது.

மின் ஊழியர் மத்திய அமைப்பை பொறுத்தவரை தமிழக மின்வாரியத்தை பொதுத்துறையாக பாதுகாத்திட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறோம். தமிழக மக்களுக்கு தேவையான மின்சாரத்தை மாநில மின்சார வாரியமே மின் உற்பத்தி செய்ய வேண்டும். மின் உற்பத்தி பணிகளை போர்க்கால அடிப்படையில் முழுவீச்சில் துவங்கி, உற்பத்தியில் ஈடுபட வேண்டும். தமிழக மக்களின் எதிர்கால மின் தேவையை கணக்கில் கொண்டு புதிய மின் திட்டங்களுக்கு திட்டமிடப்பட வேண்டும்.

மின் வாரியம் நிதி நெருக்கடியில் சிக்கியிருப்பதாக கூறப்படுவதற்கு பணியாளர்கள் எவ்விதத்திலும் காரணமல்ல. வாரியத்தின் மொத்த வருவாயில் 13.04 சதவீதம் மட்டுமே பணியாளர் களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்கு வழங்கப்படுகிறது. சுமார் 45,000-க்கும் மேல் காலிப்பணி இடங்கள் இருந்தும் இதை நிரப்பிடாத காரணத்தால் கூடுதல் பணிச்சுமையோடு இருக்கின்ற பணியாளர்கள் மனசோர்வோடு

பணியாற்றி வருகின்றனர்.

மின்வாரியம் கடன் நெருக்கடியில் சிக்குவதற்கு மின்வாரியம் பின்பற்றிவரும் நீண்டகால மின் கொள்முதல் ஒப்பந்தங்களே! அதிக விலை கொடுத்து மின்சாரத்தை தனியாரிடம் கொள்முதல் செய்வதை தவிர்த்திட்டால் மின்வாரியம் பெரும் நிதி நெருக்கடியிலிருந்து தப்பிக்க முடியும். தமிழக அரசு இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இயற்கையின் சீற்றங்களான மழை, வெயில், வெள்ளம், புயல் எனற் அனைத்து இடர்பாடுகளையும் சந்தித்து பணியாற்றுபவர்கள் மின்வாரிய ஊழியர்களே!

கொடிய கொரானா நோய் தொற்றுக் காலத்தில் கூட முன்களப்பணியாளர்களாக ஆண்ட, ஆளும் அரசுகள் அறிவிக்காத போதும் தங்கள் இன்னுயிரை பணயம் வைத்து தடையில்லா மின்சாரத்தை வழங்கி அரசுகளுக்கு பெருமை சேர்த்தவர்கள் இந்த மின்வாரிய பணியாளர்களே

3,16,38,472-க்கும் மேற்பட்ட மின் இணைப்புகளை களப்பிரிவில் சுமார் 32000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்கள் இருந்தும் நிரப்பாத காரணத்தால் கூடுதல் பணிச்சுமையோடு பணியாற்றி வரும் நிலை. கணக்கீட்டு பிரிவில் பதவி உயர்வு வழங்கியும் ஆரம்ப கட்ட பணியை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வாரியத்தின் வருவாயை ஈட்டித்தரும் கணக் கீட்டுப்பிரிவு ஊழியர்களின் துயரங்களை சொல்லிமாள முடியாது.

மின் ஊழியர் மத்திய அமைப்பு இந்த சூழ்நிலைகளையெல்லாம் கருத்தில்கொண்டு சுயேட்சையாகவும்,கூட்டாகவும் தொடர்ந்து கடிதங்கள் வாயிலாகவும்,வாரிய நிர்வாகத்திடமும், மற்றும் மாண்புமிகு அமைச்சரிடமும் தெரிவித் திருந்தோம். ஆனால் தொழிலாளர் நலன் காக்கும் ஒரு விடியல் அரசும் மின்வாரிய பணியாளர் களுக்கு இதுவரை விடியலைத் தரவில்லை.

நாடு முழுவதும் ஏறிவருகின்ற விலைவாசி உயர்வு என்பது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சமீப காலங்களில் பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலை உயர்வு அனுதினமும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. இதனால் அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்ந்துள்ளது. தமிழக மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த பாதிப்பு தமிழக மின்வாரிய பணியாளர்களையும் விட்டு வைக்கவில்லை,விலைவாசி ஒரு பக்கம் உயர்ந்து வருவதாலும் மக்கள் வாங்கும் சக்தி குறைந்துள்ளது.

புதிய ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு கடந்த 29.06.2021 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சரை சந்தித்து ஊதிய உயர்வு கோரிக்கை பட்டியலை அளித்துள்ளோம்.மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்கள், மற்றும் பகுதிநேர பணியாளர்கள் ஆகியோரை பணி நிரந்தரப்படுத்திட வேண்டும் என்றும்,அதற்கான நடவடிக்கையில் வாரிய நிர்வாகம் ஈடுபடவேண்டுமென் தெரிவித்துள்ளோம்.

எனவே நமது கோரிக்கையை ஒரு பட்டியலாக மீண்டும் தயாரித்து வெளியீட்டு நிகழ்ச்சியாக நடத்தி பணியாளர்கள் மத்தியில் கொண்டு செல்வற்கு திட்டமிட்டுள்ளோம்.

தமிழக அரசும் வாரியமும் தொழிற் சங்கங்களின் வேண்டுகோளை ஏற்றும் கவனம் செலுத்த வேண்டும் என்ற வேண்டுகோளோடு ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையை உடனடியாக துவங்கிட வேண்டும் என மின் ஊழியர் மத்திய அமைப்பு வலியுறுத்துகிறது.

- எஸ்.இராஜேந்திரன்

---




## புதுவை மின்ஊழியர்கள் போராட்டத்திற்கு ஆதரவாக தர்மபுரியில் ஆர்ப்பாட்டம்




# உழைக்கும் மக்களுக்கான பட்ஜெட் அல்ல கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான பட்ஜெட்

ஒன்றிய அரசு கடைபிடிக்கக் கூடிய புதிய உலகமய, தாராளமய கொள்கைகளை மேலும் தீவிரமாக அமல்படுத்துவதற்கான பட்ஜெட்டை மக்களவையில் 2022 - 2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையாக அமைச்சர் அறிவித்துள்ளார்.

பட்ஜெட்டில்... புதிய வேலை வாய்ப்பை உருவாக்குவது குறித்தோ, நகர்புற வேலை வாய்ப்பு உத்தரவாத திட்டத்தை உருவாக்குவது குறித்தோ எந்த அறிவிப்பும் இல்லை கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 20 கோடி இளைஞர்கள் வேலை இழந்துள்ளனர்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு கொண்டு வந்த கிராமப்புற வேலை உறுதித் திட்டத்தையும் படிப்படியாக முடமாக்கும் முயற்சியை ஒன்றிய அரசு எடுத்து வருகிறது. கிராமப்புறங்களில் வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்து வரும் நிலையில், விவசாயமும் நாடு முழுவதும் வளர்ச்சியின்றி இருக்கின்ற இழ்சூழலில் ஒன்றிய அரசு ஊழியர்களின் ஓய்வூதியத்திற்கென ஊதியத்தில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்பட்டது அது தற்போது 14 சதமாக பிடித்தம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது ஊழியர்களுக்கு மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தி உள்ளது.

48 ஆயிரம் கோடியில் 18 லட்சம் வீடுகள் கட்டப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிப்பு என்பது வெறும் 2.5 லட்சம் ரூபாயில் ஒரு வீடு கட்டமுடியுமா என்று யோசிக்க வேண்டியுள்ளது.

விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு கட்டுப்படியான விலை வழங்குவதற்கு 2.37 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை வழங்க வேண்டும் சட்ட பாதுகாப்பு வேண்டும் என போராடிக் கொண்டிருக்கிறார்கள், விவசாயிகளின் வாழ்நிலையை குறித்து ஒன்றிய அரசு கவலைப்படவில்லை.

சிறுகுறுந் தொழில்கள் மிகப்பெரிய அளவில் மூடப்பட்டதோடு பல லட்சக்கணக்கானோர் வேலை இழந்துள்ளனர். பேரிடர் காலத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்வதற்கு மானியம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்த போது மானியம் வழங்குவதற்கு பதிலாக 2 லட்சம் கோடிகடன் வழங்கப்படும் என்ற அறிவிப்பு எந்த வகையில் நியாயம்?

மாநில அரசுகள் செயல்படுத்தி வரும் பல திட்டங்களை ஒன்றிய அரசு உதாசீனப் படுத்தியதோடு, பேரிடர் காலத்தில் ஏழை எளிய நடுத்தர மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து கொரோனா காலத்திலும் ஒன்றிய அரசின் தவறான கொள்கைகளால் திட்டத்தினால் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் தான் பயன் அடைந்துள்ளன.

நஷ்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களைத்தான் தனியாருக்கு தாரை வார்க்கிறோம் என அறிவித்து விட்டு, தற்போது லாபமீட்டக்கூடிய எல்.ஐ.சியையும், ரயில்வே, நெடுஞ்சாலையின் சில பகுதிகளை தனியாரிடம் தாரை வார்ப்பது என்ற நோக்கத்தோடு அதை மேம்படுத்துவதற்கு நிதி ஒதுக்கப் போகிறோம் என்ற அறிவிப்பு அந்த தனியார் நிறுவனங்களை மேம்படுத்தவே உதவும்.

கார்ப்பரேட்டுகளுக்கு வரிச்சலுகை, வைரத்திற்கு வரி குறைப்பு என கார்ப்ரேட் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான பட்ஜெட்டாகவே அமைந்துள்ளது. ஜி.எஸ்.டி. வரி விதிப்பால் ஏற்பட்டுள்ள நெருக்கடி, கொரானா தொற்றின் காரணமாக பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு போன்ற வற்றால் அனைத்து தொழில்களும் கடும் நெருக்கடியை சந்தித்து வருகின்ற நிலையில் அதற்கெல்லாம் தீர்வு காணும் பட்ஜெட்டாக இந்த பட்ஜெட் அமையவில்லை என வேதனையை தருகிறது.

யெம்வீ



# பட்டங்கள் ஆள்வதும் – சட்டங்கள் செய்வதும் பெண்களுக்கு சாத்தியமே!

இன்றைய உலகில் இன்றியமையாத ஒன்றாக இருப்பது கல்வியே.

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு**

என்று வள்ளுவரும் கல்வி கண் போன்றது என்று கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட கல்வி பெண்களுக்கு அன்றும், இன்றும், எந்த அளவில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

அன்றைய நமது சமூகம் பெண் கல்வியை ஊக்கப்படுத்தவில்லை. பெண்கள் வீட்டை ஆள வேண்டும், ஆண்கள் நாட்டை ஆள வேண்டும் என பிரித்திருந்தனர். பெண் என்பவள் வீட்டு வேலைகளைச் செய்து குழந்தைகளையும், கணவனையும் கவனிப்பவளாக வளர்க்கப்பட்டாள், வீட்டை ஆளும் பெண்ணிற்கு கல்வி தேவையில்லை என்ற மனநிலையில் சமூகம் இருந்தது.

அதிகாரம் அறிவினால் கட்டப்படுகிறது. இதனால் இயற்கையாகவே ஏற்படும் ஆண், பெண் உறவு முறையில் ஏற்படும் அதிகாரப் போட்டியில் பெண்களுக்கான அறிவு வளர்ச்சியை கட்டுப்படுத்தியது. இதற்காக பல தந்திரங்கள் செய்தனர். குறிப்பாக பால்ய விவாகம், பருவமடைந்ததும் பள்ளிக்கு அனுப்ப மறுப்பது என்று பெண்கள் கல்வி கற்பது தடையாகியது.

பெண் கல்வி கற்பது பெரும் கனவாகவும், சவால் நிறைந்ததாகவும் இருந்தது. நீண்ட நெடிய போராட்டங்களும், தியாகமும் அதற்கு தேவையாக இருந்தது. கல்வி பெற்றாலும் உயர்கல்வி பெறுவதில் பல தடைகளை தாண்ட பல நூற்றாண்டுகள் காத்திருக்க வேண்டி இருந்தது.

அதிகம் அறியப்படாமல் பெண்களின் கல்விக்காக அறிய பல சாதனைகளைப் படைத்தவர் சாவித்திரிபாய் புலே, 1848-லேயே புனேயில் பெண்களுக்கான தனிப்பள்ளியை நிறுவியவர், இந்தியாவிலேயே பெண்களுக்கான முதல் பள்ளி என்ற சிறப்பு அப்பள்ளிக்கு கிடைத்தது. “மகிளா சேவா மண்டல்” என்ற அமைப்பினை ஏற்படுத்தி பெண்கள் கல்வி பெறுவதற்காக பல தடைகளை உடைத்தவர் சாவித்திரிபாய் புலே.

பெண் கல்வி பெண்களுக்கு சமூகத்தில் தனி மரியாதையை பெற்றுத்தருகிறது. ஆணுக்கு இணையாக பெண்கள் வளர பெண் கல்வியே மிகவும் தேவையாகிறது. மனிதனின் ஆறறிவை செழுமையாய் வைத்திருப்பதில் கல்வி மிகப்பெரிய பங்கு வகிக்கிறது.

ஒரு பெண் சமூகத்தில் தன் பெற்றோருக்கு நல்ல மகளாகவும், உடன் பிறந்தவர்களுக்கு சகோதரியாகவும், கணவனுக்கு மனைவியாகவும், குழந்தைகளுக்கு நல்ல தாயாகவும் விளங்குகிறாள். ஒரு ஆணிற்கு கிடைக்கும் கல்வி அவனுக்கு மட்டுமே பயன்படும், ஆனால் ஒரு பெண் பெரும் கல்வி அவளுக்கு மட்டும் இன்றி சுற்றி

உள்ளவர்களுக்கும், அவளின் சந்ததியினருக்கும் போய் சேர்கிறது.

கல்வி தான் பெண்களுக்கு துணிச்சல் மிகுந்த ஆயுதமாய் இருக்கிறது. நம்நாட்டில் தலைச்சிறந்து விளங்கின பல பெண்கள் இதற்கு சான்றாவார்கள். இந்தியாவின் முதல் பெண் கவர்னர் சரோஜினி நாயுடு, முதல் பெண் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, இந்தியாவின் முதல் பெண் முதல்வர் சுதேசா கிருபளாணி, முதல் பெண் சபாநாயகர் ஷானா தேவி, உச்சநீதிமன்ற முதல் பெண் நீதிபதி பாத்திமா பீவி, இந்தியாவின் முதல் வெளிநாட்டு தூதர் விஜயலட்சுமி பண்டிட், இந்தியாவின் முதல் ஐபிஎஸ் கிரண்பேடி, இந்தியாவின் முதல் குடியரசு தலைவராக பிரதிபா பாட்டீல், எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் பெண் பச்சேந்திரி பால், விண்வெளியில் வெற்றி கண்ட கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ், விளையாட்டு வீராங்கனை பி.டி.உஷா போன்ற பல பெண்கள் கல்வியால், திறமையால், உழைப்பால், பெண்களால் எல்லாம் முடியும் என நிரூபித்துள்ளனர்.

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரும் உரிமை மறுக்கப்பட்ட காலத்தில் தான் நம் நாட்டின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி ரெட்டி சரித்திரம் படைத்தார். சென்னையில் உள்ள அடையாறு புற்றுநோய் மருத்துவமனை அவரால் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பெண் கல்வியில் உயரும் போது தான் சமுதாயம் சிறப்படைய வாய்ப்புள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. ஆணாதிக்கம் அதிகமாக இருந்த போதும் பெண் சுதந்திரத்திற்காக அரும்பாடுப் பட்ட பாரதியார்.

ஏட்டையும் பெண்கள் தொடுவது
தீமையென் றெண்ணி இருந்தவர்
மாய்ந்து விட்டார் - என்று பாடினார்.

பெண் என்ற தாய்மையில் தான் உலகில் அனைத்து உயிர்களும் தோன்றுகின்றன. நாட்டின் வளர்ச்சிக்கு அறிவியலும்,பொருளாதாரமும் எந்த அளவிற்கு முக்கியமோ அந்த அளவிற்கு பெண்களின் பங்கும் இன்றியமையாதது. அதனால் தான் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்று கேட்டவர்களுக்கு பதிலடி கொடுப்பதற்காக

வீட்டிற்குள்ளே பெண்ணை பூட்டி
வைப்போம் என்ற விந்தை மனிதர்
தலை கவிழ்ந்தார் - என்ற வரிகளை எழுதினார்.

பெண் கல்வி நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான ஒன்று குடும்பத்தில் பொறுப்புகளை சுமக்கின்ற பெண் வேர்களைப் போன்றவர் வேர்கள் வலுவாக இருக்கும் போது தான் மரம் செழுமையாக இருக்க முடியும். பெண் கல்வி வேர்களை பலப்படுத்தும் இதன் மூலம் குடும்பம் வலிமையாகும். அதனால் நாடு வலிமையாகும்.

1901-ல் சென்னை மகாணாத்தில் எழுத்தறிவு பெற்ற பெண்கள் 0.9 சதவீதம் மட்டுமே இன்று 74 சதவீதம் உயர்ந்துள்ளது. இன்று பெண்களின் கல்வி முன்னேற்றம் அடைந்துள்ளது, பெண்கள் படிப்பதும், வேலைக்கு செல்வதும் தவிர்க்க முடியாத அம்சமாக இன்று கருதப்படுகிறது.

இன்றைய உலகம் பெண் கல்வியை ஊக்கப்படுத்துகிறது. பெண்கள் கல்வி அறிவு பெற்று பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர். நாட்டின் தலைவர்களாகவும், பெரிய நிறுவனங் களின் தலைவர்களாகவும் இருக்கின்றனர். அனைத்து துறையிலும் சென்று தங்கள் திறமை,கடின உழைப்பினால் வீட்டை மட்டுமன்றி அலுவலகம், தொழிற்சாலை, நீதிமன்றம், கல்வித்துறை, விளையாட்டு, அறிவியல், அரசியல், என்று அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர்.

பெண்களின் இந்த வளர்ச்சிக்கு முற்போக்கு சிந்தனையுள்ள பல சமுதாய அமைப்புகளும், தொடர் போராட்டங்களும்,பல நல்ல தலைவர்களும் காரணம் குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால்

பெண்களிடம் கரண்டியை
பிடிங்கிவிட்டு புத்தகம்
கொடுத்தால் போதும் - என்ற பெரியாரும்
அறிவை தேடி ஓடுங்கள்
நாளைய வரலாறு
உங்கள் நிழலாக
தேடி ஓடி வரும் - என்ற அம்பேத்கரும்,
பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் -
எட்டு மறினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி - என்ற பாரதியும்

முதன்மையானவர்கள்.

**வீட்டை அழகாக்கும் பெண்களுக்கு**
**உலகை அழகாக்க**
**பெண் கல்வியை வளர்ப்போம்**
**தேசநலன் காப்போம்.**

**- தஞ்சை தனலட்சுமி**



# விடியல் அரசும் விடியாத தொழிலாளர்களும்!

மதராஸ் ஸ்டேட் எலெக்ட்ரிசிட்டி போர்டு ( MSEB ) என்ற பெயருடன் செயல்பட்ட காலத்தில் இருந்து பின் தமிழ்நாடு மின்சார வாரியமாக செயல்பட்டு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், மின் தொடரமைப்பு கழகம் என தற்போது செயல்படும் காலம் வரையில் பிரித்து பார்க்க முடியாது பகுதியினர் என்று சொன்னால் அவர்கள் மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் தான்.

அன்றும் இன்றும் என்றும் நீக்கமற கலந்து மின்துறையோடு ஓர் அர்ப்பணிப்புடன் பணி செய்து வருகின்றனர். அன்று அணைக்கட்டு பணி முதல் இன்று துணை மின் நிலையங்களிலும் இயக்கம் மற்றும் பராமரிப்பு FOC வரை இவர்களின் பங்கு இன்றியமையாதாக உள்ளது.

புயல் வெள்ளம் போன்ற இயற்கை பேரிடரின் போது தொலைக்காட்சிகளில் இவர்களை பற்றி பேசாத தொலை காட்சிகளே இல்லை எனலாம்.ஒரு படி மேலே போய் தினமலர் பத்திரிக்கை கடவுளுக்கு இணையாக மின் ஊழியர்களை மக்கள் பார்க்கிறார்கள் என செய்தியை வெளியிட்டது. செய்தி ஊடகங்கள் இராணுவத்திற்கு இணையான பணி என செய்தி வெளியிட்டது.

இந்த புகழாரம் ஒப்பந்த ஊழியர்கள் இன்றி இல்லை என்பதை அரசும் உணர்ந்தது. அப்போதைய மின்துறை அமைச்சர் திரு. தங்கமணி அவர்கள் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பாராட்டு விழா நடத்தப்படும் அடையாளம் காணப்பட்டு நிரந்தரப் படுத்தப்படும் என பாராட்டி மகிழ்ந்தார். அரசுக்கு அவப்பெயர் ஏற்படாமல் பணி செய்தார்கள் என்று செய்திகளுக்கு பேட்டி அளித்தார் அமைச்சர்.

அப்போதைய எதிர்கட்சி தலைவர் ஒப்பந்த ஊழியர்களுக்கு ஆதரவான செய்திகளை வெளியிட்டார். கழக ஆட்சி அமைந்ததும் மின் வாரியத்தில் பணிபுரியும் ஒப்பந்த ஊழியர் களை நிரந்தரப்படுத்தப்படுவார்கள் என்ற அறிவிப்போடு நிற்காமல் திமுகவின் தேர்தல் பரப்புரைகளிலும் பகிரங்கமாகவே அறிவிக்கப் பட்டது.

2021 சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த திமுக அரசு தேர்தல் அறிக்கை மற்றும் பரப்புரையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றியும் வருகிறது.

மழை புயல் வெள்ளம்இயற்கை பேரிடர்கள் பல்வேறு இடர்பாடுகளில் ஒப்பந்த ஊழியர்கள் பணி செய்து வந்துள்ளனர். இவர்களின் மீது அரசின் பார்வை விழவில்லை என்பதே நிதர்சனம்.

தமிழக மின்துறையில் நித்தம் விபத்து நடந்து கொண்டு வருகிறது. இவ்விபத்துகளில் சிக்குபவர்கள் பெரும்பாலும் ஒப்பந்த ஊழியர்களே என்பது வாரியமும் அரசும் உணர மறுக்கிறது.

மின் உற்பத்தி வட்டங்களில் ஏற்படுகின்ற விபத்துக்கள் மின் விநியோக பிரிவுகளில்

ஏற்படுகின்ற விபத்துக்கள் மின் தொடரமைப்பு கழகங்களும் இதில் விதிவிலக்கல்ல. விபத்துக்களில் சிக்கியுள்ள ஊரியர்களுக்கு முறையான இழப்பீடுகளும் வழங்கப்படுவது இல்லை. பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இழப்பீடாக வேலையும் வழங்குவதில்லை. மின்வாரியத்தின் அன்றாட பணிகளில் தன்னை இணைத்துக் கொள்ளும் தொழிலாளி விபத்து ஏற்பட்ட பிறகு கேட்பாரான்றி தனித்து விடப்படுகிறார்கள்.

இப்படி தன்னலமற்ற பணிகளை செய்து வரும் ஒப்பந்த ஊழியர்களை அடையாளம் காணப்பட வேண்டும். 22.02.2018-ல் ஏற்பட்ட ஒப்பந்தப்படி தினக்கூலி ரூ.380/- வழங்கிட வேண்டும். மின்வாரிய பணிகளில் இளம்வயதில் வந்தவர்கள் 15-20 ஆண்டுகள் மின்வாரியத்தில் பணியாற்றி விட்டு இளமை காலத்தை மின்வாரியத்தில் தொலைத்துவிட்டு வேறு பணி தெரியாமல் தன் வாழ்நாளில் பெரும்பகுதியை இழந்துள்ளனர். இப்படிப்பட்ட ஊழியர்கள் குறைந்த அளவிலேயே உள்ளனர்.

மின்சார வாரியத்தில் மேல்மட்ட அதிகாரிகளுக்கு தெரிந்தும் தெரியாமலும் ஒப்பந்த பணியாளர்களை கொண்டு பணி செய்யப்படுகிறது. அந்த அளவிற்கு ஊழியர்கள் பற்றாக்குறை உள்ளது. தேர்தல் நேரங்களில் ஸ்டாலின் தான் வாராரு விடியல் தர போராரு என்று வாஞ்சையோடு இசைத்த திமுக அரசு தான் தமிழகத்தில் நடைபெறுகிறது.

ஒப்பந்த ஊழியர்களின் வாழ்வில் விடியல் எப்போது என்ற ஏக்கம் ஏக்கத்தோடு எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். இந்த ஏக்கத்தை வலியை உணர்ந்து குரலற்றவர்களின் குரலாய் மத்திய அமைப்பு கோரிக்கை வைக்கிறது. மின்வாரிய ஒப்பந்த ஊழியர்களின் வாழ்வில் ஒளி ஏற்றுங்கள்!

- ஆர். ரவிக்குமார்




புதுவை மின்சார தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக திருச்சியில் ஆர்ப்பாட்டம்



புதுவை மின்சார தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக நெல்லையில் ஆர்ப்பாட்டம்



# நேரடி வகுப்பும் ஆன்லைன் கற்றலும் முரண்பாடுகளும் ~ சவால்களும்

கரோனா பெருந்தொற்று மாணவர்களின் கல்வி முறையில் பெரும் அளவில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆன்லைன் கல்வி முறை மிகுந்த நன்மையை வழங்குகிறது என்று சொல்ல முடியாது. மாணவர்கள் தங்கள் விருப்பப்படி சொந்தமாக அட்டவணை தயாரித்து படிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தி உள்ளனர். இணையதள வசதிகளால் ஆன்லைன் கற்றல் என்பது அனுபவத்தில் அவ்வப்போது எழும் சந்தேகங்களுக்கு தீர்வு கிடைப்பதில் சில பிரச்னைகள் இருக்கிறது.

பல ஆண்டு காலம் வகுப்பறை கற்றல் சூழலில் பழகிய மாணவர்களுக்கு ஆன்லைன் கற்றலில் பல்வேறு பிரச்சனைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆன் லைன் கற்றலில் புதிய சூழ்நிலையை மாணவர்கள் ஏற்றுக் கொள்ள பழக வேண்டும்.

ஆன்லைன் கற்றலில் இணைய இணைப்பு பல மாணவர்களுக்கு கிடைப்பதில் பல சிரமங்கள் உள்ளது. இருந்த போதிலும் பல மாணவர்கள் தொழில் நுட்பம் குறித்தோ கணினிப் பயன்பாடு குறித்தோ தெளிவான புரிதலை பெற்றிருப் பதில்லை. ஆன்லைன் வகுப்புகளில் தொழில் நுட்பச் சிக்கல்கள் பல எழத்தான் செய்கிறது இணைய வழி குறைபாடுகளால் நேரலை கற்றலிலும், தகவல்களையும் வீடியோக்களையும் பதிவிறக்கம் செய்வதில் சிக்கல் ஏற்படுகிறது.

ஆன்லைன் கற்பித்தலில் நேரம் என்பது மிக முக்கியம் வகுப்பறை கற்பித்தலில் சரியான நேரத் திட்டமிடல் இல்லாவிட்டாலும் வகுப்புகள் முடிந்த பிறகு திறன் குறைந்த மாணவர்களுக்கு ஆசிரியர்கள் நேரத்தை ஒதுக்கி வைத்து கற்றலை மேம்படுத்தும் நடைமுறை இருக்கிறது.

பள்ளியில் சென்று கற்றலுக்கும், வீட்டு சூழலில் கற்றலுக்கும் நிறைய வித்தியாசம் உள்ளன மாணவர்களுக்கு சந்தேகங்கள் எழும் போது கற்றல் வகுப்பை நடத்துவர்களிடம் தொடர்பு கொண்டு சந்தேகங்களக்கு தீர்வு காண முடியாமல் போகிறது. பள்ளியில் படிக்கும் மாணவர்கள் ஆசிரியர்களை நேரடியாகத் தொடர்பு கொண்டு தனிப்பட்ட முறையில் தங்களின் சந்தேகங்களை தெரிவித்து விளக்கங்களைக் கேட்கலாம்.

பள்ளியில் கற்றலின் நோக்கமே அதை நாம் எவ்வளவு புரிந்து கொண்டோம் என்பதை பொறுத்து தான் அமையும். எனவே நமது செயல்பாடுகள் குறித்து ஆசிரியர்கள் நமது திறன் குறித்து தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பாக அமையும். மாணவர்களுக்கு புரிந்து கொள்ளக் கூடிய சில எளிய வாசிப்புகளை ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும் ஆன்லைன் வகுப்பு முடிந்தவுடன் ஆசிரியர்களுடன் மாணவர்கள் சற்று நேரத்தை ஒதுக்கி கற்றலை மேம்படுத்தும் சூழ்நிலை தற்போது உருவாகவில்லை.

- power



# 15 பணியிடங்களுக்கு 11,000 இளைஞர்கள் விண்ணப்பம் நவீன இந்தியா!

வேலையில்லா திண்டாட்டம் என்பது இந்தியாவில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பலமடங்கு கூடியுள்ளது. அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலை என்ற சுதந்திர இந்தியாவின் முழக்கம் என்பது 75 ஆண்டுகளுக்கு முன்பாக அண்ணல் அம்பேத்கர் மற்றும் ஜவகர்லால் நேரு அவர்களால் பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்டு முழக்க மாகவே ஆனது. அதனை செயல் வடிவத்திற்கு கொண்டுவர இந்திய பொருளாதாரம் தடையாக இருந்தது. ஆசிய பிராந்தியத்தில் நமக்கு பின் சுதந்திரம் அடைந்த சீனா மற்றும் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் இன்று செல்வ செழிப்பாக இருக்கிறது. இன்று அதிலும் குறிப்பாக உலக வர்த்தக அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி சீனா பொருளாதாரத்தில் வலிமை பெற்ற நம்பர் ஒன் நாடு என்ற புகழை எட்டியுள்ளது. சீனா நம்மைவிட அதிக மக்கள் தொகை கொண்ட நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வியை வியாபாரமாக்கிய ஆட்சி யாளர்கள் அந்த வியாபாரத்தின் மூலம் பல கோடிகளை சொத்து சேர்த்த முதலாளிகள், அந்த முதலாளிகளின் பிரதிநிதிகளாக செயல்படும் மத்திய மாநில அரசுகள் வேலை இல்லா திண்டாட்டத்தைப்பற்றி கவலைப்பட வில்லை.படித்து முடித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. வேலை வாய்ப்பை உருவாக்கி தர வேண்டியது அரசின் முக்கிய கடமையாகும். வேலை வாய்ப்பு என்பது அரசுத்துறையாகவோ, தனியார் துறையாவோ சுயதொழிலாகவோ எதுவாக இருந்தாலும் அதை உருவாக்கித்தர வேண்டியது அரசின் கடமையாகும். இளைஞர்களை உற்பத்தியில் ஈடுபடுத்துகின்ற நாடு தான் பொருளாதாரத்தில் வலிமை ஏற்படும் என்ற பொருளாதார தத்துவத்தை ஆட்சியாளர்கள் அறிவார்களா என்று நமக்கு தெரியாது.

இந்த நிலையில் மத்திய பிரதேசத்தின் குவாலியர் மாவட்ட நீதிமன்றத்தில் பியூன், தோட்டக்காரர், துப்புரவு பணியாளர் ஆகிய 15 பணி இடங்களுக்கு மட்டும் பட்டதாரிகள், முதுகலைப் பட்டதாரிகள் என 11,000 பேர் விண்ணப் பித்திருந்தனர். மத்திய பிரதேசத்தின் நேர்காணல் மையங்களுக்கு வெளியே உள்ள நீண்ட வரிசைகள் இந்தியா முழுவதும் நீடிக்கும் வேலை இல்லா திண்டாட்டத்தை படுமோசமாக சித்தரிக்கும் காட்சியாகும். மேற்கண்ட வேலைகளுக்கு கல்வித்தகுதி 8ம் வகுப்பு, 10-ம் வகுப்பு என்று இருந்தாலும் பட்டதாரிகள் தங்கள் படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்காததால் இப்பணி இடங்களுக்கு விண்ணப்பித்துள்ளர்.

இதே போல நரசிங்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் பியூன்கள், ஓட்டுநர்கள், துப்புறவு பணியாளர்கள், தோட்டக்காரர்கள் ஆகிய 16 பணி இடங்களுக்கு 6973 வேலையற்ற இளைஞர்கள் விண்ணப்பித்துள்ளனர். இது இந்தியாவில் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு வேலை இல்லாத திண்டாட்டம் தலைவிரித்து ஆடுகிறது என்பதை தெளிவாக காட்டுகிறது. இது மத்திய பிரதேசம்

மட்டுமல்ல. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் இது பொருந்தும். இந்திய இளைஞர்களின் வேலை இல்லாத திண்டாட்டத்தை தீர்ப்பது என்பது இந்தியா வல்லரசாக வேண்டும் என்ற கனவுக்கு இணையானது. இந்த கனவு மெய்ப்பட வேண்டுமென்றால் அனைவருக்கும் கல்வி கொடுப்பதோடு நிற்காமல் அனைவருக்கும் வேலை வழங்குவது எப்படி என்று பொருளாதார நிபுணர் குழுவுடன் கலந்து ஆலோசனை செய்ய வேண்டும். அதற்கான ஒரு செயல் திட்டம் வகுக்க வேண்டும். செயல் திட்டத்தை அமலாக்க போதிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். சுயதொழில் வாய்ப்பு, விவசாய தொழில் பாதுகாப்பது, ஏற்றுமதி இறக்குமதி, தொழிலில் பயிற்சி ஆகியவற்றில் மத்திய மாநில அரசுகள் கவனம் செலுத்த வேண்டும்.

வளர்ந்த நாடுகளிலிருந்து தொழில்நுட்பம் உட்பட அனைத்தையும் பெற்று இந்திய இளைஞர்களின் வேலையில்லா திண்டாட்டத்தை போக்க நீண்ட நெடிய பாதையை துவக்க வேண்டியுள்ளது.

இதை மத்திய மாநில அரசுகள் செய்யாது போனால், வாக்களித்த இளைஞர்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த அரசுகள் தயங்கினால் இளைஞர்கள் அடுத்த தேர்தலில் தான் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை முடிவு செய்வார்கள். அவர்களின் கையில் இரண்டு முடிவு மட்டுமே உள்ளது. தன்னை வாழவிடாமல், வாழ்க்கைக்கு வழிகாட்டாமல் உள்ள முதலாளித் துவ கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும்.

அல்லது வறுமை ஒழிப்பு, கல்லாமை அகற்றி இல்லாமை போக்கி எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும்.

பொறுத்திருந்து பார்ப்போம்! யாருக்கு வாக்களிக்கிறார்கள் என்று!

**- தி. ஜெயசங்கர்**



புதுவை மின்சார தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக ராமநாதபுரத்தில் ஆர்ப்பாட்டம்



புதுவை மின்சார தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக மதுரையில் ஆர்ப்பாட்டம்

# வேலையிழப்பு!

# விஞ்ஞான வளர்ச்சி தொழில்நுட்பம்

1991 காட் ஒப்பந்தத்தின் மூலமாக உலகம் முழுவதும் தங்குதடையின்றி தொழில் செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கி கொடுத்தது. அன்று முதல் இந்தியா உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்ற கொள்கையை மையமாக வைத்து ஒன்றிய அரசு தனது கொள்கையை அமல்படுத்தி வந்தது. அதன் பயனாக இந்திய முதலாளித்துவம் என்பது கார்ப்பரேட் முதலாளித்துவத்தை நோக்கி நகர துவங்கியது. உலகமயத்தின் காரணமாக பன்னாட்டு தொழில் நுட்பங்கள் இந்தியாவில் நுழைந்து தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்படத் துவங்கியது. அதிலும் குறிப்பாக தகவல் தொழில் நுட்பத்தின் அரசு வளர்ச்சியின் காரணமாக மிரளவைக்கும் மாற்றங்களை தொழில்துறையில் ஏற்படத்துவங்கியது. இதன் பயனாக முதலாளிகளின் இலாபம் என்பது 5 மடங்கு உயர்ந்தது.அதே நேரம் வேலை வாய்ப்புகள் பலமடங்கு குறையத் தொடங்கியது. தொழில் நுட்பம் புகுத்துவதன் மூலமாக வேலை வாய்ப்புகள் குறைவது தவிர்க்க முடியாது என்று முதலாளித்துவவாதிகள் வாதிட்டனர்.

தொழில்நுட்பம் என்பது சந்தையின் வளர்ச்சிக்காக மட்டுமல்லாமல், இலாபத்தை மட்டுமே நோக்கமில்லாமல் மனித சமூகம் அடுத்த கட்ட தலைமுறைக்கு கொண்டு செல்வதற்கு பயன்படுவதாகும். இப்படித்தான் இடதுசாரி சிந்தனையாளர்கள் தொழில்நுட்ப வளர்ச்சியை பார்க்கின்றனர். அதே நேரம் தொழில்நுட்ப வளர்ச்சியினால் ஏற்படுகின்ற வேலை இழப்புகள் ஈடுகட்டுவதற்கு, வேறு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க முதலாளித்துவம் தவறுகின்றது. அதே நேரம் கம்யூனிஸ்ட் கொள்கையை ஏற்று கொண்ட நாடுகள் தொழில் நுட்பத்தையும் உள்வாங்கி புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்ற சமச்சீரான கொள்கையை அமல்படுத்துகின்றன. இதனால் மக்கள் விஞ்ஞானத்தையும் உள்வாங்கி கொண்டு, பொருளாதார வளர்ச்சிக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் முக்கிய பங்கினை ஆற்றி வருகின்றனர்.

தொழில்நுட்ப வளர்ச்சி என்பது தவிர்க்க இயலாது, அதே நேரம் அந்த தொழில்நுட்பம் அந்நாட்டு மக்களை, வேலை இல்லா திண்டாட்டத்திலும் வறுமையிலும் ஆழ்த்தி விடக் கூடாது. 2000-ம் ஆண்டுக்கு பிறகு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி என்பது பொருட்களை உற்பத்தி செய்கின்ற இடத்தில் மட்டுமல்லாது மனிதன் அன்றாடம் பயன்படுத்தும் அனைத்து விஷயங்களிலும் உள்ளே நுழைந்து தவிர்க்க முடியாத ஒன்றாக இன்று மாறியுள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக தொழில்நுட்பத்தின் காரணமாக உருவாக்கப்படும் நவீன விஞ்ஞான கருவிகளை மக்கள் பயன்படுத்துவதன் மூலம் மக்கள் மனதிலும்முதலாளித்துவாதிகள் அவர்கள் விரும்பும் கருத்தியலை திணிக்கின்றனர். இதன் காரணமாக சாமான்ய மனிதர்கள் பொருளாதார நெருக்கடியில் இருந்தாலும் வறுமையில் இருந்தாலும் முதலாளித்துவ பொருளாதார

நுகர்வு கலாச்சாரத் தின் காரணமாக கடன் வாங்கியாவது பொருட்களை வாங்க வேண்டும் என்ற நிர்பந்தத்திற்கு ஆளாகின்றனர். இதன் காரணமாக ஏழை எளிய மக்களிடம் உள்ள சிறிய சேமிப்புகள் கூட காணாமல் போகிறது. வறுமை நிலைத்து நிற்கிறது.

வியர்வை சிந்தி உழைப்பதற்கு உழைப் பாளிகள் பல லட்சம் பேர் உள்ளனர். அவர்களின் வேலை வாய்ப்புகள் எல்லாம் நவீன தொழில் வளர்ச்சியின் காரணமாக அறிவார்ந்த விஞ்ஞானி கள் மூலமாக வேலை வாய்ப்புகள் பறிக்கப்பட்டு அவர்கள் சமூகத்தில் நிற்கதியாக உள்ளனர். மனித ஆற்றலை பயன்படுத்துபவர்களே புத்திசாலிகள் என்ற முன்னோர் சொல் நவீன காலத்தில் காலாவதியாகி விட்டதாகவே நாம் காண முடிகிறது. இந்திய ஆட்சியாளர்கள் தொழில்நுட்பத்தை புகுத்த காட்டிய ஆர்வத்தில் பத்துசதமாவது மக்களைப் பற்றியும் இளைய சமூகத்தின் வேலை வாய்ப்புகளைப் பற்றியும் சிந்தித்து இருந்தால் இந்தியாவில் வறுமை என்றோ ஒழிந்திருக்கும். வல்லசு நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணைந்திருக்கும். கடந்த 70 ஆண்டுகளாக இந்தியாவைஆட்சி செய்த ஆட்சியாளர்கள் வெவ்வேறு கட்சியினராக ஆட்சி செய்திருந்தாலும் கூட அவர்களின் கொள்கை ஒன்று தான். அது முதலாளித்துவ, கார்ப்பரேட் முதலாளித்துவ கொள்கையாகும்.

கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தாமல் அந்த கொள்கை மக்களுக்காக இல்லாமல் இருந்தால் நாட்டில் வளர்ச்சி என்பது எப்பொழுதும் இருக்காது. வாக்களித்த மக்கள் புதிய ஆட்சியை தேர்ந்தெடுத்த பிறகு அவர்கள் ஆளும் 5 ஆண்டுகளில் சாமான்ய மக்கள் வளர்வதற்கான வாய்ப்புள்ள நம்பிக்கையூட்டும் அளவிற்கு செயல்கள தெரிந்தாலே மாற்றங்கள் நிகழும், வளர்ச்சி தானாகவே வளரும்.

அப்படிப்பட்ட மாற்றங்களையும், வளர்ச்சி யையும் மக்களுக்காக ஏற்படுத்த முடியயும் என்று சொன்னால் அது பொது உடமை தத்துவம் தான்.பொது உடைமை தத்துவம் காலாவதியான தத்துவம் என்று சினிமாவை வைத்து அரசியல் செய்பவர்கள், ராமரையும், கிருஷ்ணரையும் வைத்து அரசியல் செய்பவர்கள் திரும்ப திரும்ப சொன்னாலும் மாறாதது, அழியாதது பொது உடமை சித்தாந்தம் தான். அதை புரிந்து கொள்வதும், அறிந்த கொள்வதும் இன்றைய காலகட்டத்திற்கு அவசிய தேவையாக உள்ளது. முதலாளித்துவம் தனியார் மயத்தை தூக்கிப்பிடிக்கிறது. பொது உடமை தத்துவம் பொதுத்துறைகளை தூக்கி பிடிக்கிறது. முதலாளித்துவம் முதலாளிகளை தூக்கிப் பிடிக்கிறது, ஏழைகளை சுரண்டுகின்றது. பொது உடமை தத்துவம் சாமான்ய மக்களை பாதுகாக்க போராடுகின்றது. மக்களின் காவலனாக தொடர்ந்து அது தன் பயணத்தை தொடர்கிறது.

மின்வாரிய ஊழியர்களும் சமான்ய மக்களும் யாரை ஆதரிக்க போகின்றார்கள் முதலாளிகளையா? அல்லது ஏழைப்பங்காள னையா? முதலாளித்துவ தத்துவத்தையா அல்லது அனைவருக்கும் எல்லாம்பொது என்ற பொதுவுடமை தத்துவத்தையா சிந்திப்போம், செயல்படுவோம்.

- தி. ஜெயசங்கர்



## நன்கொடை

தோழர் **வெள்ளியங்கிரி,** கம்பியாளர்,
காளம்பாளையம் கோவை வடக்கு அவர்கள்
மின்பாதை ஆய்வாளராக பதவி உயர்வு
பெற்றமைக்கு கோவை வடக்கு கிளைக்கு
ரூ. 3000/-ம், நிர்மல் பள்ளிக்கு ரூ. 1000/-ம்,
மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 1000/- அளித்தார்
வாழ்த்துக்கள் (தோழர் நந்தகோபால் மூலமாக)



# தமிழக மின்வாரியத்தில் வெளி மாநிலத்தவர்கள் பணி நியமனமும் தகவல் அறியும் உரிமைச்சட்டமும்!

சில ஆண்டுகளுக்கு முன்பாக தமிழக மின்வாரியம் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு துறைகளில் வெளிமாநிலத்தவர்கள் உட்பட உலகளாவிய அளவில் போட்டித் தேர்வு மூலம் பணி நியமனம் செய்ததை கண்டித்து நாம் கடுமையான ஆட்சேபனையை தெரிவித்தோம். அது மட்டுமன்றி தமிழகத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர் வினையாற்றியன. இந்த நிலையில் தமிழகத்திலுள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பறிபோகும் என்ற ஆபத்து இருப்பதை உணர்ந்த அனைவரும் இதற்கு கடுமையாக எதிர்ப்பு குரல் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் இதுவரையில் இல்லாத வகையில் தமிழக வேலை வாய்ப்புகளை வேற்று மாநிலத்திற்கு எவ்வாறு அளித்தார்கள் என்ற ஐயப்பாட்டிற்கு யாரும் பதில் அளிக்கவில்லை. எப்படி சட்டமுடிவு ஏற்பட்டது என்று கூட தெரியாமல் அல்லது பொதுப்படையாக அறியாமல் இதை எவ்வாறு செய்திட முடியும் என்ற ஐயப்பாடு நமக்கு தோன்றியது. இணையத்தில் தேடிய போதும் தமிழக அரசின் இணையத்தில் தேடிய போதும் அதற்கான ஆவணங்கள் நமக்கு கிடைக்கவில்லை. இந்த நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் வெளி மாநிலத்தவர்களை தமிழக மின்வாரியத்தில் எவ்வாறு நியமித்தீர்கள் என்பதற்கான வாரிய உத்தரவு மற்றும் தமிழக அரசின் உத்தரவை கேட்டு மனு அளித்தோம். மனுவின் மீது இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு 16.10.2021 அன்று தலைமை பொறியாளர் (பணியமைப்பு)சென்னை அலுவலகத்திலிருந்து பதில் அளிக்கப்பட்டது.

பணித்தொகுதி அலுவலர் அளித்த பதிலில் TAMIL NADU STATE SUBARDINATE RULES அடிப்படையில் அரசு ஆணை எண் 112 23.08.2005-ன் அடிப்படையில் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் TAMIL NADU GOVERNMENT SERVANTS (Conditions of Service) Act 2016, இந்த சட்டத்தின் அடிப்படையில் பக்கம் 16, பாரா 7-ல் CITIZEN OF INDIA OR SUBJECTOFNAPAL ORSUBJECT OF BUTTAN OR இந்திய வம்சா வழியினராக உள்ள பாகிஸ்தானியர்கள் மியான்மர், இந்திய வம்சா வழியினராக உள்ள இலங்கை மக்கள், கிழக்கு ஆப்பரிக்க நாடுகளில் உள்ள கென்யா, உகாண்டா, தான் சான்யா, குடியரசு, ஜாம்பியா, மலாபி, ZAIRE மற்றும் எத்தியோப்பியா நாடுகளில் உள்ளவர்கள் விண்ணப்பம் செய்யலாம் என்று உள்ளது.

அதே போல மின் வாரிய பணி விதிகளில் பக்கம் 104-ல் தமிழக அரசாணையை பின்பற்றி மேலே கண்டதையே உத்தரவாக வழங்கப்பட்டது. இதற்கு கடுமையாக எதிர்வினையாற்றிய தமிழக மக்கள், அனைத்து எதிர் கட்சியினர் எதிர்ப்பின் தாக்கத்தை உணர்ந்த தமிழக அரசு மீண்டும் இதில் திருத்தத்தைக் கொண்டு வந்தது. அந்த திருத்தமானது பணி விதி எண் 91 (37-ல்) தமிழக அரசுப்பணிகளில் வெளி மாநிலத்தவர் பணி நியமனம் பெற வேண்டுமானால் பள்ளி கல்வி சான்றிதழில் தமிழை மொழிப்பாடமாக பயின்று இருக்க வேண்டும் என்ற

சரத்தை சேர்த்து இந்த பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இதையே வாரிய உத்தரவு எண் 42 நாள் 28.11.2019 அன்று மின்வாரியம் வெளியிட்டது. இதன் மூலம் வெளி மாநிலத்தவர் தமிழக அரசின் பணி இடங்களில் வருவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. மேற்கண்ட ஆவணங்களை தகவல் அறியும்உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் நிர்வாகம் பதிலாக அளித்தது.

தமிழகத்தில் படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பல லட்சம் பேர் இருக்க வெளிமாநிலத்தவர்க்கு வேலை அளிப்பது என்பது வாக்களித்த மக்களுக்கு இளைஞர்களுக்கு ஏமாற்றத்தை அளிப்பதாகும். அவ்வப்பொழுது தமிழக அரசு இது போன்ற செயல்களில் ஈடுபட்டாலும் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் தமிழ்பற்றாளர்கள், சமூக ஆர்வலர்கள் இதை கண்டு பிடித்து தமிழக உரிமையை காப்பதற்கு தொடர் எதிர்வினை ஆற்றிவந்தார்கள். எதிர்காலத்திலும் வருவார்கள்.

விழிப்புணர்வு பெற்று எதிர்வினை ஆற்றி வந்தார்கள் எதிர்காலத்தில் வருவார்கள்.

விழிப்புணர்வு பெற்ற தமிழகத்தில் தமிழக மக்களை நீண்ட நாட்களுக்கு ஏமாற்ற முடியாது என்பதற்கு இதுவே சான்று.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை சங்க நிர்வாகிகள் தொடர்ந்து பயன்படுத்துவது தவறு செய்பவர்களை தவறு செய்ய விடாமல் தடுக்கும் ஒரு சிறந்த கருவியாகும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மின்வாரியத்திலும் பயன்படுத்துவோம். மின் துறையை பாதுகாப்போம்!

**- தி. ஜெயசங்கர்**




புதுவை மின்சார தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக நாகையில் ஆர்ப்பாட்டம்



புதுவை மின்சார தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக சென்னை பொதுகட்டுமான வட்டத்தில் ஆர்ப்பாட்டம்

# மின்வாரிய பணியாளர்களுக்கு பஞ்சப்படி 01.01.2022 முதல் வழங்க பிறப்பிக்கப்பட்ட வாரிய உத்தரவு

## தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

**(சுருக்கம்)**

**படிகள் - அகவிலைப்படி 01.01.2022 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் ஆணை - வெளியிடப்படுகிறது**

**(செயலகக்கிளை)**

(நிலை) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண் 6 நாள் 12.01.2022

மார்கழி - 28-ம் நாள்
பிளவ வருடம்
திருவள்ளுவர் ஆண்டு 2052

**படிக்கப்பட்டது**

1. (நிலை) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண் 191, நாள் 18.10.2019.
2. அரசாணை (எழுத்துத் தொடர்) எண் 3, நிதி (படிகள்)த்துறை, நாள் 01.01.2022

**செயல்முறைகள்**

பார்வை 1-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயல்முறை ஆணையில் வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட அகவிலைப்படி கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.07.2019 | அடிப்படை ஊதியத்தல் 17 சதவீதம் |

பார்வை 2-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு ஆணையில் 01.01.2022 முதற்கொண்டு மாநில அரசு பணியாளர்களுக்கு கீழ்கண்ட திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

| வ.எண் | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.01.2022 | அடிப்படை ஊதியத்தல் 31 சதவீதம் |

மேற்படி உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 01.01.2022 முதற்கொண்டு வழங்கப்படும் என்றும் 01.01.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்திற்கு 17% அகவிலைப்படியே தெடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்றும்ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் மேற்காணும் ஆணையைப் பின்பற்றி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், அதன் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அகவிலைப்படியை கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடப்படுகிறது.

| **வ.எண்** | **எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது** | **அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு)** |
|---|---|---|
| 1. | 01.01.2022 | **அடிப்படை ஊதியத்தல் 31 சதவீதம்** |

மேற்படி உயர்த்தப்பட்ட விதத்திலான அகவிலைப்படியானது, பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை (ECS ) மூலம் வழங்கப்படும்.மேலும் 01.01.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்திற்கு 31% அகவிலைப்படியே தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினைக்` கணக்கிட அடிப்படை ஊதியத்துடன் தனிப்பட்ட ஊதியத்தையும் ( Personal pay ) சேர்த்துக் கொள்ள வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கீடுகையில், ஒரு ரூபாய்க்கு குறைவாக வரக்கூடிய தொகை, அதாவது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின், அதனை அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அதனைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர பணியாளர்களுக்கும்,அலுவலர்களுக்கும் மற்றும் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் ரூ..4100-12500 பெறும் பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதாகும்.

இவ்வாணை பெறப்பட்டமைக்கான ஒப்புகையை உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

( தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் ஆணையின்படி)

**ஜி. சின்னாநாகூர்**
**செயலாளர்(பொ)**

---

# விவசாய மின் இணைப்புகள்துரிதமாக வழங்க தளவாட சாமான்களை உடனே வழங்கு !

தமிழக அரசு 31.03.2022-க்குள் ஒரு லட்சம் விவசாய மின் இணைப்புகளை வழங்க தமிழக மின்சார வாரியத்திற்கு அறிவுறுத்தியுள்ளது. அரசின் அறிவிப்பு வரவேற்கதக்க வேண்டிய விஷயம்.

ஆனால் இந்த குறுகிய காலத்தில் பணியை முடிக்கச்சொல்லி தலைமையிடத்திலிருந்து அழுத்தம் கொடுப்பது சரியல்ல. ஏனெனில் கற்காரை சம்பம் இல்லை, கம்பி இல்லை, மின்மாற்றி இல்லை. பிரிவு அலுவலகர்களின் பாடு திண்டாட்டம் தான்.

விண்ணப்பித்த விவசாயிகள் தயார் நிலை பதிவு செய்த பின்பு அதற்கு மதிப்பீட்டு தயாரித்து ஒப்புதல் பெற்று தட்கல் முறையில் என்றால் சம்மந்தப்பட்ட விவசாயிகள் மதிப்பீட்டு தொகையை செலுத்தி வேலை உத்தரவு பெற்று பணிகளை செய்ய துவங்கும் நேரத்தில் தளவாடப் பொருள்கள் இல்லாமல் எவ்வாறு பணி செய்ய முடியும் என்பதை உயர்அலுவலர்கள் யாரும் கவனத்தில் கொள்வதில்லை.

களஅளவில் தளவாட பொருட்கள் இல்லை என்று வாரிய தலைமையிடம் சொல்வதற்கு கூடமேல் அதிகாரிகள் மட்டத்தில் தயக்கம் உள்ளது. எப்படியாவது செய் என்கின்ற வார்த்தை தான் உபயோகப்படுத்தப்படுகிறது. மேல்மட்டஅலுவலர்களும், பிரிவு அலுவலர்களாக பணியாற்றி சென்றவர்கள் என்பதை மறந்து விடுகின்றனர்.

சென்னை போன்ற பெருநகரங்களில் கேபிள் போன்ற Jointkit, காம்பவுண்ட் போன்றவைகளும் முறையாக வழங்காத காரணத்தால் மிகுந்த சிரமத்திற்கிடையே பணி செய்து வருகின்றனர்.

மந்திரத்தில் மாங்காய் காய்க்காது ஜீபூம்பா என்றாலும் பொருட்கள் வராது. நிதி நிலைமையை காரணம் காட்டி பொருட்களை வழங்காமல் எப்படி வேலை செய்வான் தொழிலாளி.

அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு பயன்பட வேண்டுமென்று சொன்னால் இந்த பணிகள் விரைந்து நடக்க வேண்டுமெனில்

MEN AND MATERIAL மிக அவசியம்

பணிகள் செய்ய நாங்கள் ரெடி!

தளவாட பொருட்கள் தர வாரியம் ரெடியா!

# புதியதாக உருவாக்கப்பட்ட 3 மண்டலங்கள் சம்மந்தமான வாரிய உத்திரவு

**TAMILNADU GENERATION & DISTRIBUTION CORPORATION LTD.**
**(ABSTRACT)**

Establishment – Formation of new Distribution Region with Headquarters at Karur, Thanjavur & Thiruvannamalai and shifting of Head Quarters of one Distribution Region from Chennai to Thiruvallur – Orders issued.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

(Administrative Branch)

**(Per.) FB TANGEDCO Proceedings No. 1 Dated 25.01.2022.**

Thai-12, Pilava Varudam.
Thiruvalluvar Aandu 2053.

READ:

1. (Per.) FB TANGEDCO Proceedings No.11 (Adm. Branch) dated 13.10.2021.
2) Announcement made by the Honourable Minister for Electricity, Prohibition and Excise in the State Legislative Assembly on 07.09.2021.
3) Minutes of 105th meeting of the Board of TANGEDCO Held on 19.01.2022 (Agenda No.TG – 105.63).

--------

PROCEEDINGS:

In the reference 1st cited, Board of TANGEDCO has accorded in-principle approved to reorient the existing Electricity Distribution Regions and Electricity Distribution Circles of TANGEDCO to ease down in the balancing in work as well as administration process subject to the condition that the operating staff strength should not be increased.

i) Formation of Karur Distribution Region with Head Quarters at Karur comprising Karur EDC from Trichy Region, Palladam EDC from Coimbatore Region and Namakkal EDC from Erode Region with some recurring expenditure and non- recurring expenditure of Rs.23,90,000/- per annum.

ii) Formation of Thanjavur Distribution Region with Head Quarters at Thanjavur comprising Thanjavur, Thiruvarur and Nagapattinam EDC from Trichy Region with some recurring expenditure and non-recurring expenditure of Rs.23,90,000/- per annum.

iii) Formation of Thiruvannamalai Distribution Region with Head Quarters at Thiruvannamalai comprising Thiruvannamalai and Kallakurichi Electricity Distribution Circles from Villupuram Region and Dharmapuri EDC from Vellore Region with some recurring expenditure and non-recurring expenditure of Rs.23,90,000/- per annum.

iv) Shifting of Head Quarters of Chennai South Region to Thiruvallur and rename it as Thiruvallur Region with Kancheepuram and Chengalpattu Electricity Distribution Circle and Shifting of Head Quarters of one Chennai EDC to Thiruvallur and rename it as Thiruvallur EDC by duly rationalizing the existing infrastructure in Chennai Regions.

v) Consequent to the above formation, Villupuram Distribution Region be reconstituted with Villupuram, Cuddalore and Perambalur Electricity Distribution Circles with **"Nil"** expenditure.

vi Similarly, Trichy Distribution Region be reconstituted with Trichy, Pudukottai and Dindigul Electricity Distribution Circles with **"Nil"** expenditure.

vii It is directed to identify and re-deploy suitable posts for the newly created Distribution Regions as per requirement so that no additional post is created.

viii It is directed to reorganise Chennai EDCs and to shift one Regional Head Quarters and one Circle Head Quarters to Thiruvallur.

3) On completion, the entire reorganisation may be placed before the Board.

4) The expenditure is debitable to "TANGEDCO Funds – Karur, Thanjavur & Thiruvannamalai Regions and shifting of Head Quarters of one Distribution Region from Chennai to Thiruvallur Distribution Circles – some recurring expenditure and non-recurring expenditure – Accounts".

The receipt of the Proceedings shall be acknowledged.

(BY ORDER OF THE BOARD/ TANGEDCO)

R.KRISHNAMOORTHY
CHIEF ENGINEER/PERSONNEL

# அழிவின் பாதையில் சென்று கொண்டிருக்கும் பூமியை காப்போம்!



**பூ**மியின் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டிருக்கிறது. உலகில் இப்போது 6வது இன அழிவு நடந்துக் கொண்டிருக்கிறது. மனிதச் செயல்களால் மில்லியன் தாவர விலங்குகள் அழியும் ஆபத்தில் உள்ளது. நொடிப் பொழுதில் இத்தகைய பேரழிவு எங்கு, எப்போது, எவ்வாறு நிகழும் என்று அறியும் முன்பே நிகழ்ந்துவிடும் மோசமான சூழ்நிலையில் பூமி இன்று உள்ளது.

ஏற்கனவே 50 சதவீதம் கூடுதலான இயற்கை சூழல் மண்டலங்கள்அழிந்துவிட்டது. கொள்ளை நோய்க் காலத்தில் கொண்டு வரப்பட்ட பொது முடக்கத்தின் போது உலகம் முழுவதும் காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டன. வளி மண்டலத்தில் அச்சம் ஏற்படுத்தும் அளவு பசுமைக்குடில் வாயுக்களின் அளவு அதிகரிக்கிறது. மனிதன் பூமியின் எல்லையைத் தாண்டியும் வளங்களைச் சுரண்டும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளான்.

உலக அரசுகள் தங்களுக்கு கிடைக்கும் ஒவ்வொரு அரிய வாய்ப்பையும் நழுவ விடுகின்றன. அவர்களால் நிச்சயிக்கப்படும் இலக்குகளை அவர்களே மீறுகின்றனர். மனிதன் பூமிக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மனிதன் என்றாவது ஒரு நாள் இதற்கெல்லாம் வருத்தப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

ஆப்ரிக்க தலைவர்கள், குடிமக்கள், தன்னார்வக் குழுக்கள் ஒன்று கூடி சூழலைக் காக்க பாதுகாக்கப்பட்ட நிலப்பகுதிகளை காப்பாற்றுவது தொடர்பாக விவாதிக்க உள்ளனர்.

2022 சூப்பர் ஆண்டாக வேண்டு மென்றால் உலக நாடுகள் ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உறுதியுடன் செயல்பட வேண்டும் புவி வெப்ப உயர்வைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காலநிலை மாற்றம், இயற்கையின் அழிவு, பாலைவனமாதல் தடுப்பு என்று பூமியை அச்சுறுத்தும் மூன்று முக்கியப் பிரச்சனைகளில் 30 ஆண்டுகளுக்கு முன்பே எடுத்த முடிவை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விஞ்ஞானிகள் வலியுறுத்து கின்றனர்.

2030 ஆம் ஆண்டிற்குள் 30 சதவீதம் நிலப்பரப்பு மற்றும் கடற்பரப்பை அழிவிலிருந்து காப்பாற்ற பல நாடுகள் முன்முயற்சிகள் எடுக்க வேண்டும். பன்னாட்டு புதைபடிவ எரிபொருள் நிறுவனங்கள் உயிர்ப்பன்மயத் தன்மையை பாதிக்காத வகையில் தங்கள் உற்பத்தியை திட்டமிட்டு இயற்கைக்கு நேர்மறையில்லாமல் நிலம், கடல், காலநிலை மாற்றம், ரசாயனப் பொருள்கள் மாசுபடுதல் ஆக்கிரமிப்பு உயிரினங்கள் போன்றவை சிக்கலான வகையில் சூழலை பாதிக்காத வகையில் உலக நாடுகள் முயற்சிக்க வேண்டும்.

2022 ஆம் ஆண்டு சூப்பராண்டாக அமைய சீனாவில் குன்மிங் நகரில் உலக உயிர்ப் பன்மைத் தன்மை குறித்த சர்வதேச மாநாடு நடக்கவுள்ளது. ஜனவரி 2022ல் நடக்கவிருந்த இந்த மாநாட்டிற்கான ஆயத்தப் பேச்சுவார்த்தைகள் ஒமிக்ரான் பரவல் காரணமாக தள்ளி வைக்கப்பட்டு நான்காவது முறையாக மார்ச் 2022ல் திட்டமிட்டப்படி நடைபெற உள்ளது.

சீனாவில் நடைபெறும் இந்த மாநாட்டில் பிளாஸ்டிக் மாசு குறைப்பு, பூச்சிக் கொல்லிகளின் பயன்பாட்டை மூன்றில் இரண்டு மடங்கு குறைப்பது, ஆக்ரமிப்பு உயிரினங்களின் ஊடுருவலைக் குறைப்பது, இதன் மூலம் உள்ளூர் உயிரினங்களின் அழிவைத் தடுப்பது, உயிரோட்டமுள்ள சூழல் மண்டலங்களை காப்பது போன்ற அம்சங்களுடன் இந்த மாநாடு நடைபெற உள்ளது.

சீனாவில் நடைபெற உள்ள குன்மிங் உயிர்ப் பன்மயத் தன்மை மாநாடு நல்ல முடிவுகளை கொண்டு வரும் என்று நம்புவோம்.

தொகுப்பு: எம்.வீ.

# தமிழக விடுதலை போராளிகளை அவமதித்த ஒன்றிய அரசை கண்டித்தும் மத்திய தொழிற்சங்கங்களின் நாடு தழுவிய வேலை நிறுத்தம் வெற்றி பெற... மாநிலம் முழுவதும் மின்ஊழியர்கள் உறுதி மொழி ஏற்புநாள் 26.01.2022










Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 09.02.2022




சிஐடியு மாநில மைய அலுவலகத்தில் தேசிய கொடி ஏற்றும் நிகழ்ச்சி 26.01.2022 அன்று தேசிய கொடியை மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் எஸ்.இராஜேந்திரன் அவர்களும் சிஐடியு கொடியை சிஐடியு மாநில செயலாளர் தோழர் கே.கோபிகுமார் அவர்களும் ஏற்றினர்.



திருச்சி



கடலூர்

Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian